பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 27 புதன்கிழமை (11.03.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:105

## அமைச்சர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாம்

# மாத்தறை மீலாத் தின விழாவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## 15 பேர் பலி; அமைச்சர் விஜயசேகர உட்பட 41 பேர் காயம்!!

கொழும்பு, மார்ச் 11

மாத்தறை அக்குரஸ்ஸ கொடப்பிட்டிய பகுதியில், நேற்று அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட மீலாத் தின நிகழ்வில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மஹிந்த விஜயசேகர உட்பட 41 பேர் காயமடைந்துள்ளனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## புலிகளின் தற்கொலைத் தாக்குதல் இன, மத பகைமையை உருவாக்கும்

### அரசாங்கம் கண்டித்து அறிக்கை

கொழும்பு, மார்ச் 11

அக்குரஸ்ஸவில் நேற்று மீலாத் நிகழ்வில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று கூறியுள்ள அரசு, இத்தாக்குதல் இன, மத பகையை உருவாக்கும் முயற்சி என்றும் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தின் செயலாளர் நாயகம் அனுர பல்பிட்ட விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் மீலாத் நிகழ்வில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அரசு கடுமையாகக் கண்டிப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஈவிரக்கமற்ற பயங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம்கள் சர்வதேச தரத்துடன் இல்லாவிட்டால் ஐ.நாவின் உதவிகள் நிறுத்தப்படும் என எச்சரிக்கை

நியூயோர்க், மார்ச் 11

முல்லைத்தீவில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வரும் மக்களுக்காக அமைக்கப்படும் முகாம்கள், சர்வதேச தராதரத்துக்கு அமையக் காணப்படவில்லை என்றால் ஐக்கிய நாடுகளின் நிதியுதவி கிடைக்காமல் போகலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மழையின் மத்தியிலும் கடும் ஷெல் தாக்குதல் இரண்டு நாள்களில் 45 பேர் பலி என அறிவிப்பு

கொழும்பு, மார்ச்11

கடந்த இரண்டு தினங்களாகப் பெய்த கடும் மழையினால் பொதுமக்கள் மேலும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மழையின் மத்தியிலும் நடைபெற்ற ஷெல் வீச்சினால் அவர்கள் மேன்மேலும் அவதியுறும் நிலை தோன்றி உள்ளது. மழை நேரத்தில் நடத்தப்பட்ட கடும் ஷெல் தாக்குதல்களில் காயமுற்றவர்களின் சிகிச்சை பலனளிக்காததால் 45 பேர் பலியானதாகத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களுக்குரிய உதவிகளை வழங்க தொண்டு நிறுவனங்களை அனுமதிக்குக!

### அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்துகிறார்

கொழும்பு, மார்ச் 11

வன்னியில் இடம்பெயர்ந்து அல்லலுறும் அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு பூரண அனுமதியளிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபார்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் வீச்சில் படையினருக்குச் சேதம்

கொழும்பு, மார்ச் 11

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் இருதரப்புகளுக்கும் கடும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன என தேசிய பாதுகாப்புக்கான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக வந்த வாகனங்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்களும், பழவகைகளும்

### இங்கிருந்து வெங்காயம், மரக்கறி, கருவாடு ஏற்றிச் செல்லப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 11

குடாநாட்டுக்குச் சுமார் இரண்டரை வருட இடைவெளியின் பின்னர் ஏ-9 பாதையூடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 22 லொறிகள் நேற்று இரவு 7.30 மணியளவில் நாவற்குழி களஞ்சியத்தை வந்தடைந்தன.

கொழும்பில் இருந்து திங்கட்கிழமை நண்பகல் புறப்பட்ட இந்த லொறிகள் இரவு வவுனியாவில் தரித்து நின்று நேற்றுக்காலை புறப்பட்டு இரவு 7.30 மணியளவில் நாவற்குழி களஞ்சியத்தை வந்தடைந்தன.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மற்றும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குக்கு அதிகாரப் பகிர்வு வழங்க இரகசிய ஆலோசனை படையினரின் தியாகத்தை அவமதிக்கும் செயல் இது



### ஜே.வி.பி. பொதுச் செயலாளர் கண்டனம்

கொழும்பு,மார்ச்11

வடக்கு கிழக்குக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதற்காக அமைச்சர்கள் சிலர் இரகசிய ஆலோசனை நடத்தி வருகிறார்கள். நாட்டை இரண்டாகப் பிரிக்கும் இந்த முயற்சியை அரசு கைவிட வேண்டும். படையினர் இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி பல தியாகங்களைச் செய்து பெற்ற வெற்றியை இச் செயல் அவமதிக்கிறது.

இவ்வாறு சாடியுள்ளார் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பியின்) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

பிட்டகோட்டேயில் அக்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து

(02 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி நேற்றிரவு தெரிவித்தார். காங்கேசன் - திருமலை பயணிகள் கப்பல் சேவையில்

(16 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. பொலிஸாரின் மேற்பார்வையில் புதைகுழி தோண்டப்படுகிறது 2. நீதிபதி இரா.வசந்தசேனன், சட்ட வைத்திய அதிகாரிகள் என்.சுகந்தன், சே.இரட்ணசிங்கம் ஆகியோர் புதைகுழி தோண்டப்படும் இடத்தில் 3. மூதாட்டியின் சடலம்.

# நத்தார் தினத்தன்று காணாமற்போன மூதாட்டியின் சடலம் 74 நாள்களின் பின்னர் அவரது வீட்டு வளவில் மீட்கப்பட்டது

## புதைகுழிக்கு மேல் சிமெந்து மூடி

யாழ்ப்பாணம், மார்ச் 11

கடந்த டிசெம்பர் மாதம், நத்தார் தினத்தன்று காணாமற்போன மூதாட்டியின் சடலம், அவரது வீட்டு வளவுக்குள் புதைகுழியில் 74 நாள்களுக்குப் பின்னர் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

யாழ்.நகரப் பகுதியில் மார்ட்டீன் வீதியைச் சேர்ந்த வேதநாயகம் லில்லிமலர் (வயது 80) என்பவர் கடந்த டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி காணாமற் போயிருந்தார். அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்.பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரண்டரை மாதங்கள் கழிந்த நிலையில் அந்த மூதாட்டியுடன் வசித்து வந்த குடும்பத்தினர் வழங்கிய தகவல் ஒன்றின் பேரில் சடலம் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டது.

யாழ்.பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஐ.எஸ்.ருக்மல் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டது.

அதன் பின்னர் -

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் என்.சுகந்தன், கே.இரட்ணசிங்கம் ஆகியோர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

சடலம் புதைக்கப்பட்ட இடத்தைச் சுற்றி மலசலகூடம் அமைப்பது போன்று வேலிகள் போடப்பட்டு மலக்குழிக்கு சிமெந்து மூடி போடும் பாணியில் ''பிளேட்'' போட்டு மறைக்கப்பட்டிருந்தது.

சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டதுடன் கொலையுண்டவர் குளிர் தடுப்புக்கு அணிந்திருந்த ''சுவெற்றர்'' சட்டையும் சடலத்தில் காணப்பட்டது.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் வீட்டில் குடியிருந்தவரையும் தேடிவருகின்றார்கள்.

(அ-68)

# வன்னி மக்கள் கௌரவமாக நடத்தப்படுவதை சர்வதேச நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 11

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்கள் கௌரவத்துடனும் நீதியுடனும் நடத்தப்படுவதை உறுதி செய்வதற்கு உலக நாடுகள் தலையிடவேண்டுமென்று சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச சமூகம் இதுவரை பொது மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு இரு தரப்பிற்கும் அழுத்தம் கொடுக்கத் தவறிவிட்டது என்று மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான ஆய்வாளர் சருலடா கொக் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் வரை, அதற்குக் காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படும் வரை இராணுவ வெற்றிகள் நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வரா எனத் தெரிவித்துள்ள அவர், இதுகுறித்து மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் மோதலில் சிக்கியுள்ள மக்கள் கௌரவமாகவும் நீதியுடனும் வாழ அனுமதிப்பதை அரசும் விடுதலைப் புலிகளும் உறுதி செய்வதற்காக அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் செயற்பட வேண்டும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான மோதலில் சிக்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களின் வாழ்க்கையில் மரணமும் பேரழிவும் முடிவுறாதவையாகக் காணப்படுகின்றன.

எமது சமீபத்தைய ஆய்வுகள் ஜனவரி மாதத்துக்குப் பின்னர் 2ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பதைப் புலப்படுத்தியுள்ளன. இரு தரப்புகளும் தொடர்ச்சியாக யுத்தச் சட்டங்களை மீறியுள்ளன. பல பொதுமக்கள் பாதுகாப்பு வலயங்களில் உயிரிழந்தனர் என்பது பற்றி எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

விடுதலைப் புலிகள் பொதுமக்களைச் செல்லவிடாமல் தடுக்கின்றனர். அரச கட்டுப்பாடற்ற பகுதிக்கு வர முயல்பவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்கின்றனர். சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கின்றனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் சிக்கியுள்ள மக்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகக் கருதப்படுவர் என அரச அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வந்த மக்களை நாம் பேட்டி கண்டோம். அவர்கள் சிறிதளவும நம்பிக்கையற்றவர்களாக உள்ளனர்.

அரச பகுதிக்கு வரும் மக்கள் கடுமையான இராணுவத் தடுப்பு முகாம் போன்ற நலன்புரி நிலையங்களை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு மோசமான நிலைகளும் நடமாட்ட சுதந்திரமின்மையும் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார். (சி)

# நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களுக்கு போஷாக்கு உணவு வகை விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் மற்றும் கொடிகாமம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்படும் சோளம், சோயாமா உடனடியாக உண்பதற்கேற்றவாறு தயாரிக்கப்பட்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இம்மாவுடன் சேர்ப்பதற்கு வேண்டிய தேங்காய்களை சாவகச்சேரி வாழ் மக்களும், சீனியினை நலன்விரும்பி ஒருவரும் வழங்கியுள்ளனர். அதேவேளை சாவகச்சேரி மற்றும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதார தொண்டர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட இம்மாக்கலவையினை யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை பூபதி வெதுப்பகத்தினர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வையுடன் உடனடியாக உண்பதற்கேற்ற முறையில் பதப்படுத்தி உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இதற்கு வேண்டிய வசதிகளை ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்ட யாழ்ப்பாண அலுவலகம் மேற்கொண்டதாக சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்தது. (1)

## வடக்கு, கிழக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவே இதைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

எமது படையினர் பல தியாகங்களுக்கு மத்தியில் வடக்கைப் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டுக்கொண்டு வருகின்றனர். இந்த நாட்டுக்காக அவர்கள் பெற்றுத் தரும் வெற்றி கௌரவிக்கப்படல் வேண்டும்.

பயங்கரவாதிகளை யுத்தத்தின் ஊடாக இல்லாதொழிப்பதன் மூலம்தான் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வர். ஆனால், இதற்கு மாறாக அதிகாரப் பகிர்வை வழங்கும் நடவடிக்கை ஒன்றில் அரசு ஈடுபட்டுள்ளது.

அதிகாரப்பகிர்வு மீண்டும் ஒரு பிரிவினை வாதத்துக்கே வழியேற்படுத்தும். தற்போது அரச அமைச்சர்கள் இது தொடர்பாக இரகசியமான முறையில் கூடி ஆராய்ந்து வருகின்றனர்.

சமீபத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான், அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, டிலான் பெரேரா மற்றும் ராஜித சேனாரட்ன ஆகியோர் இது தொடர்பாகக் கூடி ஆராய்ந்துள்ளனர்.

யுத்தம் முடிவுற்றதும் வடக்கு, கிழக்குக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதே அரசின் ஒரே திட்டம். இந்த முயற்சிக்கு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

நாட்டை இரண்டாகப் பிரிக்கக்கூடிய இந்த முயற்சியை அரசு கைவிடவேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம். அதிகாரப்பகிர்வு முயற்சியானது படையினர் இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி பல தியாகங்களைச் செய்து பெற்ற வெற்றியை அவமதிக்கும் ஒன்றாக அமையும் என்றார். (அ-சி)

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் காத்திரமான நடவடிக்கை எடுக்குமாம்

## தமிழர் பாதுகாப்பு இயக்கத்திடம் தூதர் ஜோலி ராயட் உறுதி

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தி, அங்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் - என்று இந்தியாவுக்கான பிரான்ஸ் துணைத் தூதர் ஜோலி ராயட் உறுதியளித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மனு அளிக்கச் சென்ற இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்களிடம் அவர் இந்த உறுதிமொழியை அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போரை நிறுத்துவதற்காக போராடி வரும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, பாட்டாளி மக்கள் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் முனைவர் ராமதாஸ், சட்டப்பேரவை உறுப்பினர் அனந்தராமன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் ந.ரா.கலைநாதன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் ரவிக்குமார், பாரதிய ஜனதா கட்சியின் புதுவை மாநிலத் தலைவர் விஸ்வேஸ்வரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதுச்சேரி அமைப்பாளர் மணிமாறன் ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் புதுச்சேரியில் உள்ள இந்தியாவுக்கான பிரான்ஸ் துணைத் தூதர் ஜோலி ராயட்டைச் சந் தித்து உரையாடினர்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து அவரிடம் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் விரிவாக விளக் கினர். ஈழத் தமிழர் நலனில் அக்கறை செலுத்தி வரும் பிரான்ஸ் அரசு இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும் மனுவையும் அவர்கள் அளித்தனர்.

அவர்களின் கோரிக்கையை ஏற்ற பிரான்ஸ் துணைத் தூதுவர் ஜோலி ராயட், இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த பிரான்ஸ் அரசால் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று உறுதியளித்தார் என ஊடகவியலாளர்களிடம் வைகோ தெரிவித்தார்.

## நலன்புரி நிலையங்களுக்கு 50 கூடாரங்கள்

கைதடி சைவச் சிறுவர் இல்லம், ஆயுர்வேத மாணவர் விடுதி ஆகியவற்றில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களுக்கு 50 கூடாரங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான கூடாரங்களை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூது வராலயத்தினர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்துள்ளனர். (1-207)

## ஊரெழுவில் வெள்ளி காணிக் கச்சேரி

ஊரெழு பொக்கனை கிராமத்திற்கான காணிக்கச்சேரி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஊரெழு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் அடையாள அட்டை, உணவு பங்கீட்டு அட்டையுடன் சமுகமளிக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

(1-72)

## இயக்கச்சியில் பெண்ணின் எலும்புக்கூடு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இயக்கச்சிப் பகுதியில் பற்றை மறைவில் பெண் ஒருவரின் எலும்புக்கூடு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

படையினர் கொடுத்த தகவலை அடுத்து கடந்த 5ஆம் திகதி கொடிகாமம் பொலிசார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

இதனையடுத்து சாவகச்சேரி நீதிவான் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியுடன் சென்று பார்வையிட்டு எலும்புக்கூட்டை பகுப்பாய்வுக்காக எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(1-207)

தேவை

ஊர்ச்சேவல் 1 Kg 450 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்.

158/4, தாசன் பாம்,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழக அரசியல் தலைவர்களுக்கு....

ஈழத்தமிழர்களின் அவலங்கள் நீக்கப்படவேண்டும்; அவர்களின் அழிவு தடுக்கப்படவேண்டும் என்பதில் தமிழக மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாகவும், மன ஈடுபாட்டுடனும், உறவு ரீதியான துடிப்புடனும் உள்ளார்கள். அந்த அடித்தளத்தில் வைத்து, இந்திய மத்திய அரசைக் கொண்டு அவற்றைச் செய்விக்கக் கூடிய பலமும் தமிழக மக்களிடம் இருக்கவே செய்கிறது. ஆனால் அங்குள்ள அரசியல் தலைவர்கள், ஈழத் தமிழர் ஆதரவு அலையைத் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்துவதுதான் கேட்கவும், பார்க்கவும் 'கண்றாவி'யாக இருக்கிறது!

கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் ஏட்டிக்குப் போட்டியாக உண்ணாவிரதப் போராட்டங்கள் மற்றும் அறிக்கைப் போர் நடத்துவது மக்களிடையே ஊற்றெடுத்துள்ள ஆதரவைத் தமது சொந்த அரசியல் நலனுக்காகத் திசை திருப்பும் வகையில் அமைகிறது.

ஈழத் தமிழர்களுக்கு உதவவேண்டும் என்ற நேர்மையான, இதயசுத்தியான எண்ணம் இருப்பின், தமிழகத் தலைவர்கள் இவ்வாறு நடந்துகொள்ளத் தேவையிருக்காது. இந்தப்போக்கு எந்த வகையிலும் ஏற்புடையதல்ல; நியாயமானதாகவும் இல்லை.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நியாயமாக நடந்துகொண்டு அவர்களுக்கு உதவவேண்டும், அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கச் செய்வதில் இலங்கை அரசிடம் உரத்துக் கூறவேண்டும் என்பதில் உண்மையான, இதயசுத்தியான அக்கறை இந்திய மத்திய அரசிடம் இல்லை. தமிழகத்தின் ஆதரவை இழந்து விடாமல் தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அரசியல் நூலின் ஒரு புரியை மட்டுமே பிடித்துக் கொண்டிருக்கிறது அது.

அந்த நிலையை மாற்றி, தமிழர் அழிவதைத் தடுப்பதிலும், அவர்களின் நீண்டநாள் விவகாரமான இன விவகாரத்தில் அவர்களுக்குரிய உரிமைகள் கிடைக் கவும், உந்தித்தள்ள வேண்டியவர்கள் தமிழகத் தலைவர்களே. இப்போது தமிழக மக்களிடம் எழுந்துள்ள ஈழத்தமிழர் ஆதரவை ஒருங்கிணைத்து, உறுதியான, அர்த்தபுஷ்டியான, வினைத்திறன் மிக்க நடவடிக்கையாக மாற்றினால் மட்டுமே மத்திய அரசை உரிய பக்கத்துக்குக் கண்ணைத் திரும்பிப் பார்க்கச் செய்யமுடியும்.

இலங்கையில் நடத்தப்படும் இனவெறித் தாக்குதல் இந்திய அரசின் - ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் - முழு ஆதரவோடு மட்டுமன்றி, முழுஈடுபாடு கொண்ட ஆதரவுடன் நடத்தப்படுகிறது என்று தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கூறியிருப்பது அவருக்கு மட்டுமன்றி முதல்வர் கருணாநிதி உட்படத் தமிழக அரசியல் தலைவர்களின் எல்லோரினதும் மனங்களிலும் "உறைக்க" வேண்டும் - வெட்கத்தை உண்டாக்க வேண்டும்.

ஈழத்தமிழருக்கான ஆதரவைத் தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்தி வாக்கு வாங்கி, தேர்தலில் வெற்றிபெற தமிழகத் தலைவர்கள் அணி பிரிந்து செயற்பட்டால், அது மத்திய அரசுக்குப் 'புகுந்து விளையாடவே' இடம்தரும். இலங்கை அரசுக்கு மேலும் சார்பாகச் செயற்படவே வழிசெய்யும்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயராம் ஜெயலலிதாவும் ஈழத் தமிழர் போராட்டத்தை ஆதரித்து உண்ணாவிரம் இருந்து - தமது ஆதரவாளர்களையும் உண்ணாவிரதம் இருக்கச் செய்து - ஈழத்தமிழர் நலன் நாடி உழைக்க முன்வந்திருக்கிறார். இது சற்று மாற்றமான ஒரு புறச்சூழலை உருவாக்கி இருப்பது புரிந்துகொள்ளக் கூடிய ஒன்றே.

ஆனால், தமிழக மக்களின் ஈழத்தமிழருக்கான ஆதரவு உணர்வினைக் குலைத்துவிடும் - சிதறுண்டு போகச் செய்யும் - விதத்தில் தமிழக அரசியல் தலைவர்கள் துளியேனும் செயற்பட்டு விடக்கூடாது என்பதே இன்றைய முக்கிய தேவை.

அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்தியப் பொதுத் தேர்தலில், அதிக ஆசனங்களைப் பெறவேண்டும் என்று கண்வைத்து, ஈழத் தமிழர் விவகாரத்தில் ஒன்று திரண்டு நிற்கும் தமிழக மக்களைச் சிதறு தேங்காயாக அடித்து, உடைத்து நாசமாக்கி விடக்கூடாது. அரசியல் போட்டிக்கு - அதிக ஆசனம் பெறும் இலக்கு வைத்து - வெண்ணெய் திரண்டுவிட்ட இந்தவேளையில் பானையை உடைத்துச் சேதமுற வைக்கக்கூடாது.

அது ஒன்று மட்டுமே, என்றும் ஏதோ ஒருவிதத்திலேனும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் குறிப்பிடத்தக்க அத்திபாரமாக நிலைக்கும்.

எதிர்வரும் தேர்தலில் ஈழத்தமிழர் அவலம் போக்குவதற்கு, இலங்கையில் தாழ்நிலை கண்டுள்ள தமிழர் அரசியல் நிலையைப் போக்குவதற்கு தமிழகத் தலைவர்களின் ஒற்றுமை கொண்ட ஆதரவு என்றும் ஔடதமாக விளங்கும் என்பதனைச் சற்று அயர்ந்தும் மறந்துவிடக் கூடாது.

தமக்கிடையே காணப்படும் பொதுவான அல்லது கோட்பாட்டு ரீதியான வேறுபாடுகளை முன்னிறுத்தி, இப்போது வளர்ந்துள்ள ஈழத்தமிழருக்கான ஆதரவை அவற்றின் பக்கம் சாய்த்துவிட முயற்சிக்கக்கூடாது. இது, பிரதான கட்சிகளுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் மட்டுமன்றி ஏனைய சகலருக்கும், தமிழகத்தில் உள்ள மன்றங்கள், சங்கங்களுக்கும் பொருந்தும்.

இது விடயத்தில், தமிழக அரசியல் தலைவர்களிடம் சுயகட்டுப்பாடு நிறையவும் தேவை; அரசியல் சுயநலம் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதில் அவர்கள் தவறினார்களானால் அல்லது குறுக்கு வழி செல்வார்களானால் தம்மை ஈழத்தமிழர்களின் தொப்புள்கொடி உறவுகள் என்று உச்சரிப்பதற்கும் தகுதியற்றவர்கள் ஆகிவிடுவர். மத்திய அரசின் வட இந்தியத் தலைவர்கள், அவர்கள் செய்யும் சுத்துமாத்துகளால் கீழிறக்கிக் கருதப்படுவதை விடவும், ஈழத்தமிழர்களுக்கு அரசியல் துரோகம் இழைத்த கடை நிலையில் வைத்து எண்ணப்பட வேண்டியவராகிவிடுவர் தமிழக அரசியல் தலைவர்கள்.

தமிழக மக்களின் ஒற்றுமையும், ஆதரவுமே ஈழத் தமிழருக்கு உள்ள வைரமான கொழுகொம்பு என்ற நிலை மாறாதிருக்க வேண்டும். மனிதநேயம் எங்கிருந்தும் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருக்கும் ஈழத்தவருக்கு அதுவே அருமருந்துமாகும்.

# வவுனியாவில் திங்கள் முதல் கடும் மழை; நலன்புரி முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கின!

## கொட்டகைகளைச் சுற்றி மண் அணை அமைக்கும் மக்கள்

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை முதல் பெய்துவரும் மழைகாரணமாக இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் பாடசாலை திறந்த மைதானங்களில் தற்காலிக கொட்டகைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள இந்த மக்கள் நேற்று முன்தினம் காலை பெய்த கடும்மழை காரணமாக பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

தற்காலிக கொட்டகைக்குள் வெள்ளநீர் புகுந்ததன் காரணமாக இந்த மக்கள் வெளியில் இறங்கி மழைநீர் உள்ளே செல்லாமல் இருக்க கூடாரங்களின் வெளியில் மண்ணை அணைத்து தடுத்துக்கொண்டு இருந்தார்கள்.

வவுனியா காமினி மகாவித்தியாலயும், வவுனியா மத்திய மகாவித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக் கழகம் மற்றும் மெனிக்பாம் போன்ற இடங்களில் வாழ்ந்து வரும் மக்களே இவ்வாறு சிரமத்துக்கு முகங்கொடுத்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை வவுனியா மாவட்டத்திற்கு 10 ஆயிரத்து 525 குடும்பங்களைச்சேர்ந்த 32 ஆயிரத்து 618 பொதுமக்கள் வந்திருப்பதாகவும் இவர்கள் வவுனியாவில் 12 இடங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியா அரச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மெனிக்பாம் கதிர்காமர் நகரில் ஆயிரத்து 160 குடும்பங்களினை சேர்ந்த 4ஆயிரத்து 216 பேரும், மெனிக் பாம் பாடசாலையில் 187 குடும்பங்களினை சேர்ந்த 585பேரும், செட்டிக்குள மகா வித்தியாலயத்தில் 645 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 998 பேரும், பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியில் ஆயிரத்து 606 குடும்பங்களினைச் சேர்ந்த 5ஆயிரத்து 37 பேரும், பம்பைமடுப் பல்கலைக்கழகத்தில் ஆயிரத்து 318 குடும்பங்களினைச் சேர்ந்த 4 ஆயிரத்து 108 பேரும் , நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரியில் 808 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 730 பேரும், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையில் ஆயிரத்து 368 குடும் பங்களினைச் சேர்ந்த 3ஆயிரத்து 68 பேரும், கோவில் குளம் இந்துக் கல்லூரியில் 340 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து132 பேரும், காமினி மகாவித்தியாலயத்தில் 430 குடும்பங்களைச்சேர்ந்த ஆயிரத்து 315 பேரும், பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் 387 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 307 பேரும், வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் ஆயிரத்து 415 குடும்பங்களினைச் சேர்ந்த 4ஆயிரத்து 715 பேரும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 861 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 407 பேரும் தங்கவைக்கப்பட்டு இருப்பதாக அரசசெயலகம் தெரிவித்துள்ளது.

(50)

## கடும் மழை காரணமாக வன்னி அகதிகளும் அவலத்தில்

வன்னியில் பெய்து வரும் மழை காரணமாக இடம்பெயர்ந்து வரும் மக்கள் பெரும் பாதிப்புக்குள் உள்ளாகியுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் பெருங்காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

காற்றுடன் கூடிய மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் கூடாரங்கள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் மழையில் நனையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பதுங்கு குழிகளினுள் வெள்ளம் சென்றுள்ளது. இந்த மழையினால் சிறியவர்களும் முதியவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஷெல் தாக்குதலில் காயமடைந்த மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## நோயாளர்களால் நிரம்பி வழியும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகள், விறாந்தைகள் அனைத்தும் நோயாளர்களால் நிறைந்து காணப்படுகின்றன.

கொடிகாமம், மிருசுவில், கைதடி ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரில் பல்வேறு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் விடுதிகளில் நாளாந்தம் அனுமதிக்கப்படுவதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தினமும் நலன்புரி நிலையங்களுக்குச் செல்லும் மருத்துவக் குழுவினரால் பரிசோதிக்கப்படும் நோயாளர்கள் விடுதிகளில் அனுமதிப்பதற்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

விடுதிகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் ஓரளவு குணமடைபவர்கள் உரிய மருந்துகள் கொடுத்து நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றின் அம்புலன்ஸ்கள் தினமும் நலன்புரி நிலையங்களில் உள்ள நோயாளர்களை ஏற்றியிறக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. (50-207)

## நேற்றுக் காலை வரை 115.1 மில்லி மீற்றர் மழை

யாழ்ப்பாணம், மார்ச்11

குடாநாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 115.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக்காலை 8.30 மணிவரையான 24 மணிநேரத்தில் 115.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த மழை வீழ்ச்சியுடன்சேர்த்து தற்போது இந்த ஆண்டுக்கான மழை வீழ்ச்சி 122.1 மில்லி மீற்றராக உயர்ந்துள்ளது. இன்றுடன் காலநிலை சீரடையும் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (50-9)

## புகையிலையும் வெங்காயமும் மழை வெள்ளத்தில் மூழ்கின

வடமராட்சி, மார்ச் 11

வடமராட்சி மற்றும் வலிகாமப் பகுதிகளில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த கடும் மழையினால் அறுவடைசெய்யப்பட்ட மற்றும் அறுவடைக் குத் தயார் நிலையில் உள்ள புகையிலை, வெங்காயப் பயிர்கள் பெரிதும் சேதமடைந்துள்ளன.

அறுவடை செய்யப்பட்ட புகையிலை உலர்த்துவதற்காக வெயிலில் காயப்போடப்பட்டிருந்தது. அதேவேளை ஏனைய புகையிலைக் கன்றுகள் அறுவடையை எதிர்நோக்கியிருந்தன. இந்நிலையில் கடும் மழையினால் காயப்போட்ட புகையிலையும் அறுவடைக்குத் தயாராக உள்ள புகையிலையும் மழையில் நனைந்து அவற்றின் தன்மை கெட்டுவிட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதேபோல தோட்டங்களில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயமும் அறுவடைக்குத் தயாராக உள்ள வெங்காயமும் வெள்ளத்தில் மூழ்கி அழுகத் தொடங்கியுள்ளன. (50-236)

# ஆசிரியர் சேவை பதவி உயர்வுக்கான கால எல்லை 6 மாதங்களால் குறைப்பு

அச்சுவேலி, மார்ச் 11

இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த காலநீடிப்பு ஆறு மாதங்களினால் குறைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையின் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சின் சுற்றறிக்கை 2005/2004 உள்ளபடி 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு கடந்த வருடம் அறிவித்திருந்தது.

2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கைகளை 31.06.2008 இல் நடைமுறைப்படுத்துமாறு 6 மாதங்களினால் குறைத்து கல்வி அமைச்சு புதிய சுற்றறிக்கையை 2005/2004 ஜனவரி27ஆம் திகதி அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தி அமைக்கப்பட்டு இலங்கை பொதுக் கல்வி ஆசிரியர் சேவை என புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு 01.07.2008 இல் நடைமுறைக்கு வர இருப்பதை முன்னிட்டே பதவி உயர்வு வழங்குவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் ஆறு மாதங்களால் குறைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் வலயக் கல்வி அலுவலகங்களினால் 31.12.2008 வரை ஆசிரியர்களின் சேவை விவரம் கணிப்பீடு செய்யப்பட்டு பதவி உயர்வுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகும் நிலையில் 06 மாதங்கள் குறைக்கப்பட்டிருப்பதால் ஆசிரியர் பதவி உயர்வுகள் தொடர்பான செயற்பாடுகளை திருப்பி 31.06.2008 அடிப்படையாக செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

கல்வி அமைச்சின் புதிய அறிவிப்பின் பிரகாரம் காலக் குறைப்புச் செய்து பதவி உயர்வுகளை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பதவி உயர்வு தொடர்பான சம்பளநிலை மாற்றங்கள் செய்வதில் மேலும் கால தாமதம் ஏற்படும் என கூறப்படுகிறது.

அத்துடன் கணிசமான அளவு ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அடுத்த தரநிலை பதவி உயர்விலும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள இலங்கை பொதுக் கல்வி ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு பட்டதாரி ஆசிரியர்களுக்கு மேலதிகமான சில வாய்ப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. (50-11)

## நாளை

| | |
|---|---|
| மாசி 28 | 12.03.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | மு.ப. 07.36 வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | மு.ப.08.11 வரை |
| [illegible] | 07.52 - 09.22 |
| ராகுகாலம்: | 01.52 - 03.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதியின் சங்கிலியை அபகரிக்க முற்பட்டவர் அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

கொட்டடி முத்தமிழ் வீதியிலுள்ள வீடொன்றில் தனிமையில் சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யுவதி ஒருவரின் சங்கிலியை அபகரிக்க முற்பட்ட திருடன் ஒருவர் அயலவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை 12 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது:-

வீட்டில் உள்ள ஏனையவர்கள் கோயிலுக்குச் சென்றுவிட தனிமையில் நின்ற யுவதி சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார். அப்பொழுது அந்த வீட்டுக்குள் புகுந்த திருடன் யுவதியின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்க முற்பட்டவேளை யுவதி சத்தம்போட்டவாறு அத்திருடனைப் பிடிக்க முற்பட்டார். ஆத்திரம் அடைந்த திருடன் யுவதியின் கன்னத்திலும், கையிலும் கடித்துவிட்டு தப்பியோட முற்படவே, யுவதியின் சத்தம் கேட்டு அங்கு கூடிய அயலவர்கள் திருடனை மடக்கிப்பிடித்தனர். பின்னர் அவர் யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த யுவதியான பற்குணராசா நிறோஜினி (வயது 20) யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (1-78)

## தவறிவிட்டது

விஜயரட்ணம் வசந்தாதேவி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (438320164V) NSB Bank அடைவுத் துண்டுகளும், மக்கள் வங்கியின் புத்தகமும், மூக்குக் கண்ணாடியும், ஒரு தொகைப் பணமும் கைப்பேர்ஸுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னால் 09.03.2009 மு.ப. 10 மணிக்கு தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இல. 021 222 7134 பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்: 02.03.1950 விண்ணில்: 10.02.2009

திதி: 12.03.2009

அமரர்

**வினாசித்தம்பி இராசநாயகம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

கடந்த 10.02.2009 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.03.09) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நெல்லை முருகன் மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பிரிவுத் துயரில் பங்கேற்றிய கல்வித்துறையினரும் ஏனையோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முருகமூர்த்தி கோவில் வீதி,
நெல்லியடி, கரவெட்டி. 0776665827

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி முகிலன்



ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப்பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி முகிலன் 18.02.2009 அன்று பிரான்ஸில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2009) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு Cimetriere Du Pers Lachaise, 16 Rue Du Repos, Paris 75020 ,France எனும் முகவரியில் நடைபெறும். என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ.பிரபாகரன், (மைத்துனர்)
74, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை. 0775298615
0778480439 (வவுனியா)

France:
0033143046733
0033620594058

### வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை



குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும் கிளான், துன்னாலை தெற்கு, கரவெட்டியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை நேற்று (10.03.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர் வேலாயுதம், நடராசா, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி,அமரர் இராசதுரை, புவனேஸ்வரி, அமரர் சுந்தரலிங்கம், திலகவதி, யோகராசா (சுவிஸ்), அமரர் சிவராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மார்க்கண்டு, கோபாலப்பிள்ளை,சுந்தரம், தவமணி கமலகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2009) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் துன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புட்டிதூர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'கிளான்' துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

## வெளிநாடு செல்லச்சென்ற இளைஞன் கடத்தப்பட்டார்

வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த சுதுமலை தெற்கு வாசியான இளைஞன் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளார்.

சுதுமலை தெற்கு, எச்சாட்டி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்சன் (வயது 26) என்பவரே கடத்தப்பட்டுள்ளார் என அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வெளிநாடு செல்லும் நோக்குடன் தனது மகன் கொழும்புக்கு சென்று சென்ரல் வீதியில் உள்ள 'கனி லொட்ஜில்' தங்கியிருந்தார் என்றும் கடந்த 7 ஆம் திகதி காலை 5 மணிக்கு அங்கு சென்ற நால்வர் கொண்ட கும்பல் அவரைக் கடத்திச் சென்றுள்ளது என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-25)

## புன்னாலைக்கட்டுவன் கொலை; இருவருக்கு விளக்கமறியல்

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர் எம்.வாமதேவன் என்பவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் அப்பகுதியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்த சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.லூடாவைக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் அவர்களது வீட்டில் இருந்து ஐந்து கத்திகளையும் மற்றும் இரத்தம் தோய்ந்த ரீசேட் ஒன்றையும் கைப்பற்றியுள்ளார்கள்.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் அவர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கும்படியும் பொருள்களை கொழும்புக்கு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பும் படியும் நீதிவான் உத்தரவிட்டார். (1-86)

## சாவகச்சேரி டச்சு வீதி மீண்டும் போக்குவரத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரி, டச்சு வீதி வாகனங்கள் போக்குவரத்து செய்வதற்கு கடந்த திங்கட்கிழமை முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த ஒரு வருடகாலமாக வாகனங்கள் இவ் வீதியினைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டிருந்தது.

வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி கச்சாய் வீதி கடந்த மாதம் திறந்து விடப்பட்டது தெரிந்ததே. (1-207)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 50 வயது சிறு தனியார் நிறுவன உரிமையாளர். இளமைத் தோற்றம் கொண்ட விவாகரத்துப் பெற்றவருக்கு (பிள்ளைகள் இல்லை) 1968ஆம் ஆண்டிற்கு பின் பிறந்த அதே குலப் பெண் தேவை. சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது. விதவைகள்,விவாகரத்துப் பெற்றவர்கள் மற்றும் ஏனையோரும் பின் வருமாறு தொடர்பு கொள்ளவும்.

செல்வி A. [illegible]
53/6, அன்னசத்திரம் லேன், [illegible] யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கீத ஆலோசகராகவும்
பின்னர் அழகியலுக்கான
உதவிக் கல்விப்
பணிப்பாளராகவும்
பணியாற்றிய
கலைஞான கேசரி
**சரோஜா தம்பு**
அவர்கள்
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களத்தினால்
கலாபூஷண விருது வழங்கிக்
கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி
வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.
வாழ்க வளமுடன் வளர்க நும் சேவை

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை,
நெல்லியடி சனசமூக நிலையம்,
நெல்லியடி கமக்காரர் அமைப்பு,
நெல்லியடி கிராம அபிவிருத்திச் சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 16.03.1920

விண்ணில்: 09.02.2009

அமரர்

**மாணிக்கம் சிவசம்பு**

திதி: பூரணை

ஓங்கார நாதனை ஓயாது பூசித்தாய்
நீங்காத அன்புடவே அவன் கழல் சேவித்தாய்
சந்திரசேகரப் பிள்ளையாரே தஞ்சமென வலம் வந்தாய்
பாரெல்லாம் வாழ்த்திடவே பரம்பொருளை அடைந்துவிட்டாய்
பண்பான அறிவுரைகள் பாங்காகப் பகர்ந்திட்டீர்
பணிவுடனே வாழ்ந்து நல்வழி காட்டினீர்
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தபோதும்
ஐயா என்று நாம் அழைக்க இன்று நீங்கள் இல்லையே
இதயம் நெகிழும் 31 ஆவது நாளில் ஏக்கத்துடன் இறைஞ்சுகின்றோம்
அன்புடனே போற்றுகின்றோம் எம் ஆசை ஐயாவே

எமது குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

G.P.S. றோட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 01.10.1980

இறைவன் அடியில்: 04.03.2007

திதி: பூரணை (11.03.2009)

**கனகரத்தினம் சுரேஷ்குமார்**

(அன்னக்கிளி பல்பொருள் அழகுமாடம்)

சிராளனே எங்கள் செல்வனே
அன்பின் உறைவிடமே எங்களை
நல்வழிப்படுத்திய புதல்வனே சகோதரனே
மைத்துனனே சித்தப்பாவே மாமாவே
உங்கள் புன்னகை மாறாத முகம்
எங்கள் நெஞ்சில் நிலைத்து நிற்குதையா
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
மாறாதையா மீண்டும் ஒரு பிறப்புண்டேல்
எம்மிடமே வாருமையா உங்கள்
ஆத்ம சாந்திக்காக நயினை நாகபூசணி
அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்
மானிட வாழ்க்கையென்பது பொழிகின்ற
மழையின் நீர்க்குமிழி போன்றது.

இல.46, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் யாழ்.ப.நோ.கூ.சங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த மகளிரின் தயாரிப்புக்களான பல்தரப்பட்ட பொருள்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## நயினாதீவு துறைமுகம் விரைவில் புனரமைப்பு

நல்லூர், மார்ச் 11

நயினாதீவு துறைமுகம் புனரமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்த துறைமுகப் பகுதியைப் புனரமைத்துத் தரும்படி நயினாதீவு கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

இதற்கமைய 25 வருடங்கள் புனரமைப்புப் பணிகள் எதுவுமின்றி இருந்த துறைமுகப் பகுதியைத் திருத்தியமைக்க வீதி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் 18 மில்லியன் ரூபா செலவில் திருத்த வேலைகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து வங்களாவடித்துறை வரையான பிரதான வீதியும் 23 லட்சம் ரூபா செலவில் அகலமாக்கப்பட்டுத் திருத்தியமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. (203-111-224)

## உரும்பிராய் முதியோருக்கு அடையாள அட்டைகள்

கோப்பாய், மார்ச் 11

உரும்பிராய் கிராமத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் அனைவருக்கும் உரிய முதியோர் அடையாள அட்டை நாளை வியாழக்கிழமை தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்படவுள்ளன.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் மேற்கு ஆகியவற்றில் கிராம அலுவலரிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-72)

## அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு திருத்தியமைக்கப்பட்டு நடைமுறைக்கு

அச்சுவேலி, மார்ச் 11

இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு திருத்தி அமைக்கப்பட்டு "இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவை" என்ற பெயருடன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரவுள்ளது.

இலங்கை அதிபர் சேவையின் திருத்தி அமைக்கப்பட்ட புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு 01.07.2008 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் முதல்முதலாக 1985.01.01இல் இலங்கை அதிபர் சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் "இலங்கை அதிபர் சேவை" அறிமுகம் செய்யப்பட்டது.

இலங்கை அதிபர் சேவை அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து தலைமை ஆசிரியர் என்ற பதவி நிலை மாற்றப்பட்டு வகுப்பு 3, வகுப்பு 2 II, வகுப்பு 2 I, தரம் I என நான்கு பகுதிகளில் அதிபர் தரநிலை நடைமுறைப்படுத்தப்பட்டது.

புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ள இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவையில் வகுப்பு 3, வகுப்பு - 2, தரம் I என மூன்று தரநிலைகள் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவையின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையில் இருந்துவந்த வகுப்பு 2 II, வகுப்பு 2 I என்பன ஒன்றிணைக்கப்பட்டு வகுப்பு - 2 என்ற பகுதி உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இலங்கை அதிபர் சேவை 2 II, 2 I இல் உள்ள அனைவரும் இலங்கை பொதுக் கல்வி அதிபர் சேவையின் வகுப்பு - 2 உள்ளீர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவையின் பிரகாரம் வகுப்பு - 3 இற்கு 17 ஆயிரம் ரூபா தொடக்கம் 19 ஆயிரத்து 40 ரூபா வரையும், வகுப்பு - 2 இற்கு 19 ஆயிரத்து 370 ரூபா தொடக்கம் 21 ஆயிரத்து 770 ரூபா வரையும், தரம் I இற்கு 22 ஆயிரத்து 415 ரூபா தொடக்கம் 39 ஆயிரத்து 935 ரூபா வரையும் சம்பளத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

புதிய இலங்கை பொதுக்கல்வி அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு இலங்கை பொதுச் சேவைகள் குழுவின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டதும் 2008.07.01ஆம் திகதியில் இருந்து (முன்கூட்டியே) நடைமுறைக்கு வரும் எனவும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (203-11)

## சாவகச்சேரி பிரதேச சபையால் கிணறுகள் இறைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்கள் தமது கிணறுகளை துப்புரவு செய்து தண்ணீர் இறைக்க விரும்பின் சாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் பே.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் கிணறுகள் கடந்த மாதங்களில் இறைக்க முடியாது நிலத்தடி நீர் மேலோங்கிக் காணப்பட்டதினால் இந்த சேவையினை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

தற்பொழுது நிலத்தடி நீர் சற்று இறங்கியுள்ள காரணத்தால் பொதுமக்களுக்கான இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டது. (203-131)




## மினி கோப்சிற்றிகள் அமைப்பதற்கு இதுவரை நிதியுதவி கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 11

குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இந்த ஆண்டு மினி கோப் சிற்றிகள் அமைப்பதற்கான நிதி இதுவரை வந்து சேரவில்லை என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான மூன்று மினி கோப் சிற்றிகளை அமைப்பதற்கு ஒவ்வொரு சங்கத்திற்கும் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்த மினி கோப்சிற்றிகளை ஆரம்பித்து வைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை இதற்கான நிதி வந்து சேராமையால் இவற்றை ஆரம்பித்து வைப்பது தாமதமாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மினி கோப்சிற்றிகள் ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமப் புறங்களில் உள்ள கிளை நிலையங்களில் நவீன வசதிகளுடன் ஆரம்பித்து வைக்கப்படும்.

இதன்மூலம் கிராமப்புற மக்கள் பெரிதும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (203-224)

## குடாநாட்டில் பெய்யும் மழையால் பெரும்போக அறுவடை பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

குடாநாட்டில் பெய்துவரும் மழையினால் பெரும்போக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வயல் நிலங்களில் அறுவடை செய்யப்பட்டு அடுக்கப்பட்டிருந்த நெல் கதிர்கள் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சில வயல்களில் நெற்கதிர்கள் சூடு மிதித்துக் கொண்டிருந்த சமயம் திடீரென மழை பெய்ய ஆரம்பித்தமையால் நெல்கள் அனைத்தும் மழையில் நனைந்ததாக வலிகாமம் பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இதே வேளை - மிளகாய், வெங்காயம், கத்தரி, வெண்டி, கீரை மற்றும் புகையிலை செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மழை தொடர்ந்தும் நீடித்தால் தற்போதைய மரக்கறியின் விலை வீழ்ச்சி உயர்வடையலாம் என்று கூறப்படுகிறது. (203-224-236)

## மண்டைதீவுக் கடற்பகுதியில் மீனவர்களின் வலைகள் காணாமல் போவதாக விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மண்டைதீவுக் கடற்பகுதியில் மீனவர்களின் படுக்கை விரிப்பு வலைகள் காணாமல் போவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களால் இவை எடுத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது.

வேறு பிரதேசங்களில் இருந்து மண்டைதீவுக் கடற்பகுதிக்கு சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களே இவ்வாறு கடலில் மீன்பிடிக்கப் போடப்பட்ட படுக்கை விரிப்பு வலைகளை எடுத்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

இதனால் மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பெரும் நஷ்டமடைவதாகக் கூறப்படுகின்றது. (203-224)

## திருநெல்வேலியில் திருட முற்பட்டவர் படையினரிடம் மாட்டிக் கொண்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து திருட முற்பட்ட திருடர் கோஷ்டியினரில் ஒருவர் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

இந்த திருட்டுச் சம்பவம் திங்கட்கிழமை இரவு கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்றது.

கொட்டும் மழையைப் பயன்படுத்தி திருடர்கள் சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து திருட முற்பட்ட சமயம் அப்பகுதியால் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரைக் கண்டு ஓட்டம் பிடித்துள்ளனர்.

இந்த வேளையில் திருடன் ஒருவன் இராணுவத்தினரிடம் வகையாக மாட்டிக் கொண்டார். இத்திருட்டுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூன்று பேரும் தப்பிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் பிடியில் சிக்கிய சம்பந்தப்பட்ட திருடன் நேற்று காலையில் திருநெல்வேலி சந்தியில் பொதுமக்களின் பார்வைக்கென 'கள்ளன்' என்று சுலோக அட்டை கழுத்தில் தொங்கவிடப்பட்டு மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் படையினரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (203-224)

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒய்வூதியத் திட்டத்தில் 1,288பேர்

மல்லாகம், மார்ச் 11

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த ஆண்டில் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் ஆயிரத்து 288 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

சமூகப் பாதுகாப்புச் சபையினால் மேற்கொள்ளப்படும் ஓய்வூதியத் திட்டத்தில் கடந்த ஆண்டு உடுவில் பிரதேச செயலர் சமூக சேவைகள் பிரிவு அலுவலர்களுடன் இணைந்து மேற்கொண்ட விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கையைத் தொடர்ந்து அதிக எண்ணிக்கையானவர்கள் கடந்த ஆண்டு இத்திட்டத்தில் இணைந்துள்ளனர்.

இந்த ஆண்டும் இந்த திட்டத்தில் மேலும் ஒரு தொகுதியினரை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் கிராம அலுவலர்களுடன் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களும் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த ஆண்டு நூற்றுக்கு மேற்பட்டவர்களை சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொண்ட கிராம அலுவலர்கள், சமூக சேவை அலுவலர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் ஆகியோர் பிரதேச செயலாளர் திருமதி ச.மஞ்சுளாதேவியால் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டப்பட்டனர். (203-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொக்குவிலில் அமைக்கப்பட்ட மூத்த பிரஜைகள் பேரவை பணிமனைத் திறப்பு விழா நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான பிரதமகுரு பு.சௌபாக்கிய குமரக் குருக்கள், கியூடெக்- கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை கி.யோ. ஜெயக்குமார் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

சமூக நலத்துறை திணைக்கள மாவட்ட இணைப்பாளர் த.கிருபாகரன் அறிமுக உரையாற்றுவதையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்றுவதையும் அடுத்துள்ள மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: ஓங்காரன்)


**STUDY IN INDIA**

**GARDEN CITY COLLEGE**

**BANGALORE UNIVERSITY DEGREES**

*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

**Courses Offered**

- BCA Bachelor of Computer Application
- B.Sc. Computer Science/Microbiology/ Genetics Biotechnology/Fashion and Apparel Design
- B.A. Journalism/B.Com Computers
- BBM Bachelor of Business Management
- BHM Bachelor Of Hotel Management
- BPT Bachelor of Physiotherapy
- LAW Bachelor of Law

- 5 Star status assessed by NAAC
- Super Graded Facilities, Hostels & Environment
- Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

**www.studyingcc.com**

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591

**SCHOLARS INFORMATION CENTER**

2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.


## மூத்த பிரஜைகள்பேரவை அலுவலகம்திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

கொக்குவிலில் அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட மூத்தபிரஜைகள் பேரவை பணிமனையை நேற்று முற்பகல் 10 மணிளவில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் திறந்து வைத்தார்.

மூத்த பிரஜைகள்பேரவைத் தலைவர் ச.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரச அதிபர் கே. கணேஷ் கலந்து கொண்டார்.

நிகழ்வில் ஆசியுரைகளை சிவஸ்ரீ கு. சௌபாக்கிய குமாரக்குருக்கள், கரித் தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் தந்தை கி. யோ.ஜெயக்குமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

வாழ்த்துரையினை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ் சொற் செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் வடக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், யாழ்.உயர் தொழில் நுட்பக் கல்லூரி முன்னாள் பணிப்பாளர் கே. ஜெயரட்ணம், பால சம்ரட்ஷணா சமூக நல நோன்பு மன்ற பணிப்பாளர் சீ.வி. கே. சிவஞானம், யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஆர். ஜனக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (9)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் வைகுந்தன் மதியாபரணம்

(வேலாயுதம் மகாவித்தியாலய ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவன், வடமராட்சி)

தோற்றம்: 17.12.1988

மறைவு: 20.02.2008

திதி: பூரணை (11.03.2009)

குடும்பத்தினர்.

(83431) போவியவத்தை, துன்னாலை, வடமராட்சி.


## கண்ணாடிகள் வந்து சேர்ந்தன

சமூக நலத்துறை திணைக்களத்திற்கு மூக்குக் கண்ணாடி கோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கான மூக்குக் கண்ணாடிகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

ரீ.கனகமணி, வீ. சின்னம்மா, டி.பிரதீபா ஆர்.கஜேந்தினி, வீ.கமலாதேவி, பீ. சிவக் கொழுந்து ஆகிய ஆறு பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வந்துள்ளன.

இவர்களை நாளை பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம் மகாலிங்கம்

மலர்வு: 03.05.1938

உதிர்வு: 23.02.2008

திதி: பிரதமை (11.03.2009)

பூஜித்த தெய்வம் போனவழி தெரியவில்லை
பொங்கிவரும் கண்ணீருக்கு அணையுமில்லை
தேற்றுவதற்கு இவ்வுலகில் யாருமில்லை
தேம்புகின்றோம் சின்னையாவே உமை நினைத்து.

(83422)

கண்ணீர்த் துளிகளுடன்:

அமரர் சு.கந்தசாமி (ஆசிரியர்) குடும்பத்தினர், பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.


## வாசகர் திருமுகம்

### சுனாமி பாதித்த எங்களுக்கு வீடுகள் எப்போது கிடைக்கும்?

2004 மார்கழி மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பல குடும்பங்களாகிய நாம் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் வசித்து வருகின்றோம். எங்களுக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வழங்கப்படவிருந்த சுனாமி வீட்டை நாங்கள் தற்பொழுது வதியும் பிரதேச செயலர் பிரிவுகளில் வழங்கும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்தோம்.

எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட யாழ்.அரச அதிபர் எமக்குப் பின்வரும் இரு நிபந்தனைகளை விதித்தார்.

நாம் தற்பொழுது வதியும் பிரதேச செயலர் பிரிவில் சொந்தமாகக் காணி இருக்க வேண்டும்.

எமக்கு வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வழங்கப்பட்ட சேத மதிப்பீட்டுப் படிவத்தை நாங்கள் தற்பொழுது வதியும் பிரதேச செயலர் பிரிவுக்கு மாற்றவேண்டும்.

மேற்படி இரு நிபந்தனைகளுக்கமைவாக எம்மில் பலர் ஏற்கனவே காணி சொந்தமாகக் கொள்வனவு செய்துள்ளனர். சேத மதிப்பீட்டு படிவத்திற்கும் தற்பொழுது குடத்தனையில் இயங்கிக்கொண்டிருக்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்து சிலர் பெற்றுக்கொண்டனர். சிலருக்கு இன்னும் கிடைக்கவில்லை.

எமது நகைகளை விற்றும் கடன்பெற்றும் பல லட்சம் செலவழித்துக் காணி கொள்வனவு செய்து பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் வீடு சம்பந்தமான எந்த நடவடிக்கையும் நடைபெறவில்லை.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வாடகை வீட்டில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் ஏதிலிகளாகச் சீவிக்கும் எங்கள் மேல் யாழ்.அரச அதிபர் கருணை கூர்ந்து எங்கள் வீடுகளைக் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

அந்தோனிப்பிள்ளை
மரியாம்பிள்ளை.
பாண்டியன்தாழ்வு.

### நம் முன்னோரின் பெருந்தன்மைகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்த கட்டுரை

கடந்த 22ஆம் திகதி ஞாயிறு ''உதயன்'' பத்திரிகையில் வெளியான ''சேர் பொன். இராமநாதனை குதிரை வண்டியில் இருத்தி தாமும் இழுத்துச் சென்ற சிங்களத் தலைவர்கள்'' என்ற கட்டுரையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சட்டசபையில் அங்கம் வகித்த சேர் பொன். இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் எவ்வாறு சிங்களச் சமுதாயத்தின் பாதுகாவலர்களாக வழிகாட்டிகளாக விளங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெட்டத்தெளிவாக, துல்லியமாகப் படத்துடன் ஆசிரியர் விளக்கியிருந்தார். ஆசிரியர் மேற்படி படத்தை பிரசுரிக்காது இருந்திருந்தால் இளம்சமுதாயம் என்ன வளர்ந்தோரும் கூட நம்பாது. நம்ப மறுக்கும் அவ்வளவு தூரம் நாட்டு நிலைமை மாற்றம் அடைந்துள்ளது.

மேற்படி சம்பவத்தைக எங்கள் தந்தையார் கொழும்பில் வர்த்தகராக விளங்கிய காலங்களில் நேரில் பார்த்ததாக எனக்கும் சகோதரர்களுக்கும் கூறுவதுண்டு. என்னைப் பொறுத்தவரையில் ஏதோ தந்தையார் கூறுகிறார் என்பதற்காக அரைகுறையாக நம்புவதுண்டு. கட்டுரை ஆசிரியர் என்னை முற்றும் முழுதாக நம்பவைத்துவிட்டார்.

பின்பு இலங்கையின் முதலாவது பிரதமராக வந்த டி.எஸ்.சேனநாயக்கா வண்டியை இழுத்து வந்தவர்களில் ஒருவர் என்றும் அவர் படத்தில் மீசையுடன் காணப்படுகிறார் என்றும் படத்தில் ஆசிரியர் குறிப்பிட்டது எந்தத் தரத்தில் உள்ள சிங்களத் தலைவர் வண்டியை இழுத்துச் சென்றார்கள் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருந்தது.

சிங்கள மக்களின் தேசபிதா என்று போற்றப்பட்ட அநகாரிக தர்மபால எவ்வாறு சேர் பொன்.இராமநாதனுக்குப் புகழாரம் செலுத்தி இருக்கிறார் என்று ஆசிரியர் குறிப்பிட்டது இன்னும் கட்டுரைக்கு மெருகூட்டுவதாக இருந்தது.

இன்று பாடப்புத்தகங்களில் கூட சரித்திரம் திரிபுபடுத்தப்பட்டு மறைக்கப்பட்டு வரும் காலத்தில் இப்படியான கட்டுரைகள் சென்றகால சரித்திரத்தில் தமிழன் எவ்வாறு நாட்டுப்பற்றுடனும் இன வேறுபாடு காட்டாது சிங்களச் சமுதாயத்திற்கும் வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள் என்பதை இளம்சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுகிறது. கட்டுரை ஆசிரியரைப் புகழுவதற்குச் சொற்களே இல்லை என்று கூறலாம்.

மு.சிவராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் இடம்பெற்ற வனிதா வாசனா மகளிருக்கான சேமிப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.செயலக காணி உதவிப் பதிவாளர் திருமதி வீ.அமலராணி மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், வங்கி முகாமையாளர் வீ.எஸ்.முதலி உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

மக்கள் வங்கி வடவலய பொது முகாமையாளர் ஏ.சி.ஆனந்தராஜா பரிசில்களை வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

# ஆண்களைப்போல் பெண்களுக்கும் சமூகத்தில் சமத்துவ உரிமை இருப்பது அவசியமாகும்

## மகளிர் தினவிழாவில் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 11

பெண் தாயாகவோ, பிள்ளையாகவோ, யுவதியாகவோ இருக்கும் ஒவ்வொரு நிலையிலும் துன்பங்களை எதிர்கொள்கிறாள். இந்தநிலை கலாசார ரீதியாக அன்று தொட்டு இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆணை விட பெண் ஐந்து மடங்கு சுமையைச் சுமக்கிறாள். சமூகத்தில் ஆண்களைப்போல் பெண்களுக்கும் சமத்துவ உரிமை இருக்க வேண்டும்.



இவ்வாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அருளேஸ்வரி வேதநாயகம் தெரிவித்தார். நேற்று முன்தினம் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

பல கிராமங்களுக்குச் சென்று பெண்களுடன் கலந்துரையாடிய பொழுது அவர்களது கஷ்டமான நிலையை உணர முடிந்தது. சமூகத்தில் சுமார் 40 வீதமானபெண்களே ஓரளவு உரிமையுடன் வாழ்கிறார்கள். பெண்கள் உடலியல் ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள்.

தற்காலத்தில் மாமியார் சீதனம் கேட்பது குறைவு. மாப்பிள்ளைதான் கேட்கிறார். வாழ்க்கையை நூறு வீதம் நல்ல நிலையில் கொண்டு செல்ல என்ன செய்யலாம் எனச் சிந்தித்தல் வேண்டும். உயர்நிலையில் படிக்கும் பெண்கள் அடக்கமுடையவர்களாக, மனிதாபிமானமுடையவர்களாக, பண்பாடுடையவர்களாக வேலை செய்கிறார்கள். சில வேளைகளில் ஆண்களைவிட நன்றாக வேலை செய்கிறார்கள்.

சமுதாயத்தில் ஆணுக்குச் சமமான சமத்துவ உரிமை பெண்களுக்கும் இருக்க வேண்டும். பாடசாலையில் கற்பிப்பவர்கள் இவற்றை உணர வேண்டும். பெண்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். அவர்களுக்கு மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமை உள்ளது. அதனோடு பிற குடும்ப சுமைகளும் உண்டு. எதிர் காலத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை குறைந்து ஆண்களால் துன்பப்படாத சமுதாயம் உருவாக வேண்டுமானால் இருக்கின்ற துன்பத்தோடு கல்விச் சமூகத்தை இறுக்கிப் பிடிக்க வேண்டிய நீங்கள்தான். ஆண்களையும் பெண்களையும் ஆளுமையுடையவர்களாக மாற்ற வேண்டும். உருவாக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக வாழவும் ஆண்களும் பெண்களும் புரிந்துணர்வோடு வாழவும் வழியேற்படும்-என்றார்.

இந்த மகளிர் தின விழாவில் யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிராணி மில்ஸ், யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கிரிதரன், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் கமலேஸ்வரி பொன்னம்பலம், இந்து மகளிர் கல்லூரி அதிபர், சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆகியோர் உரையாற்றினர். (7-110)

# சுயதொழில் முயற்சிக்கு உதவிக் கொடுப்பனவு

மல்லாகம், மார்ச் 11

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் சுயதொழில் முயற்சிக்கான உதவிக் கொடுப்பனவு 62 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூகசேவைகள் சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவி மூலம் முதலாம் கட்டமாக இவர்களுக்கு 7 ஆயிரத்து ஐநூறு ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் வைத்து பயனாளிகளுக்கு இந்த உதவித் தொகைகள், சமூக சேவைப் பகுதியின் அலுவலர்களினால் வழங்கப்பட்டுள்ளது.

(203-68)

# தவக்காலச் சிந்தனை



## நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்

இவ்வுலகில் வாழ்வதற்காக இறைவனால் படைக்கப்பட்ட நாங்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று விரும்புகிறாரோ அதன்படி வாழ வேண்டும். இறைவன் மனிதனைத் தனது சாயலாகவே படைத்தார். மற்றவர்களிடம் அன்பு செய்து கருணைகாட்டி நாம் வாழ வேண்டும். இறைவனது சித்தத்தை உலகில் பரவச் செய்யவே இறைகுமாரனான யேசு மானிட உருவத்து இவ்வுலகில் பிறந்தார். அவர் பாவிகளை மன்னித்து மனந்திரும்பச் செய்தார். நோயாளர்களைச் சுகப்படுத்தினார். மற்றவர்களுக்கு உரிமையானதை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று போதித்தார்.

தனது போதனைகளை எதிர்த்து ஏற்றுக்கொள்ள மறுத்த பரிசேயர்களைக் கூட அவர் தீர்ப்பிடவில்லை இறைவா! இவர்கள் அறியாமற் செய்கிறார்கள். இவர்களை மன்னியுங்கள் என்று இறைவனிடம் அவர்களுக்காக மன்றாடினார்.

நாங்கள் எவருக்கும் அநியாயம் செய்ய முயலக் கூடாது. ஒருவருக்கு உதவி செய்யா விட்டாலும் அவருக்கு உபத்திரத்தைச் செய்யக்கூடாது. எமது வாழ்க்கையில் நாம் எவரும் தடைக்கல்லாக இருப்பதனை எப்போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இது மனித இயல்பு. நாம் மற்றவர்களது வாழ்க்கையில் தடைக்கல்லாக வாழாமல் உதவிக் கரமாக இருந்தால் இறைவனும் தனது மேலான கருணையை எம்மீது பொழிவார்.

இந்த மனப்பாங்கை இந்தத் தவக்காலத்தில் நாம் வளர்த்து இறைவனுடன் ஒன்றிணைவோமாக.

ம.ஞானசீலன்

# பூபாலசிங்கம் புத்தகக் கடையின் உரிமையாளரை விடுவிக்க ஏற்பாடு

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் நடவடிக்கை

கொழும்பு, மார்ச், 11

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பூபாலசிங்கம் புத்தகநிலைய உரிமையாளர் ஸ்ரீதர்சிங், அவரிடம் தொழில் புரியும் எஸ்.சுதர்சன் ஆகியோரை விடுவிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் உயர்மட்டப் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தாம் முன்னெடுத்துள்ளார் என வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்ப பயிற்சி பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு :-

கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களை நேற்று காலை நிர்மாணத்துறை இயந்திரவியல் சேவை அமைச்சர் ராஜித சேனாரட்ண, பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

இந்தியாவில் பிரசுரிக்கப்படும் ஆனந்த விகடன் பிரதிகளை விமானமூலம் யாழ் நகருக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து அவைகளை விமான நிலையத்தில் ஒப்படைத்த சுதர்சன் கைது செய்யப்பட்டதை அடுத்து விநியோகஸ்தரான ஸ்ரீதர் சிங்கும் கடந்த ஐந்தாம் திகதி கல்கிஸைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட பிரசுரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை அடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் தொடர்பான நியாயத்தை பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் சகல உயர்மட்ட பொலிஸாரிடம் எடுத்துக் கூறினார். படம் அச்சிடப்பட்டதற்கும் மற்றைய செய்திகளுக்கும் இவர்களுக்கு தொடர்பு இல்லை என்றும் பிரதியமைச்சர் விளக்கமளித்தார். - என்றுள்ளது. (சி)

# புத்தகசாலை உரிமையாளர் கைதை கண்டிக்கின்றது இடதுசாரி முன்னணி

கொழும்பு, மார்ச், 11

பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளர் பூ.ஸ்ரீதர்சிங் அண்மையில் கைது செய்யப்பட்டமை அவசியமற்ற ஒரு நடவடிக்கை என இடதுசாரி முன்னணி கண்டித்துள்ளது.

இதுகுறித்து முன்னணியின் பிரசாரப் பிரிவுச் செயலர் கையெழுத்திட்டு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :-

இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பிரமுகர் மறைந்த தோழர் பூபாலசிங்கத்தின் மகனாவார். இவர் நூல்களை விற்பதில் மட்டுமே ஈடுபட்டு வந்தார். அரசியலில் இவர் ஈடுபடவில்லை. நாம் அறிந்த வகையில் இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராகவே செயற்பட்டு வந்தார்.

தமிழ் மக்கள் மீது புரியப்படும் ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகவே இந்தக் கைதும் இடம்பெற்றுள்ளது. தமிழ் மக்களை அந்நியப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றன. போரினாலும் பொருளாதாரச் சீரழிவினாலும் தமிழ் மக்கள் அல்லலபடும் இவ்வேளையில் இத்தகைய கைதுகள் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தி நிலையை மேலும் விரிவுபடுத்தச் செய்யும்.

எனவே பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளரை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் அல்லது உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என இடதுசாரி முன்னணி கோருகின்றது -என்றுள்ளது. (சி)

# உலக பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க தென் ஆசிய நாடுகள் உதவ முடியும்

மணிலா, மார்ச் 11

தென் ஆசிய நாடுகள் தமது பொருளாதாரத்தை முனைப்புடன் தூண்டி விடுவதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலம் உலக நிதிநெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு உதவ முடியும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்து வெளியிட்டிருக்கிறது.

உலகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் நிதிநெருக்கடி நிலைமை குறித்த ஆய்வு ஒன்றினை மேற்கொண்டதன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கின்றது.

தென் ஆசிய நாடுகள் மூலதன அதிகரிப்புகளாலும் பொருள்களின் விலை வீழ்ச்சிகளாலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

இந்த நிலைமை மேலும் மோசமடையும்போது ஏற்றுமதிகளும் வங்கிகளில் பணம் செலுத்தப்படுவதும் குறைந்துவிடும் என்று ஆசிய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையால் மேலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு குறுகிய கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வட்டி விகிதக் குறைப்பு நிலைமைக்கும் இடமிருக்கிறது என்று ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளின் பதிவுகள்



குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது எடுக்கப்படடட் படம்.

புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளார் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் அதிபர் ரி.ஞானப்பிரகாசம், யாழ்.வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவர் கி.கிறிஸ்தோப்பர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



வடமராட்சி கிழக்கு அம்மன் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை நெல்லியடி இலங்கை வங்கிக்கிளை உதவி முகாமையாளர் ச.சிவகுமாரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அதிபர் பொ.சிவராசா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் த.கணேசமூர்த்தி, சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.கணேசதாஸ் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: கர்ணன்)*




அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்களை அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் தலைவர் எஸ்.யோகசிங்கம், லயன்.எஸ்.இராமநாதன் மற்றும் ஆசிரிய ஆலோசகர் எஸ்.தவநாயகம் ஆகியோர் மங்கள விளக்கேற்றியபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



யாழ்.புனித மரியாள் (ஓ.எல்.ஆர்) வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் எடுக்கப்பட்ட படம்.

விருந்தினர்களான அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை, யாழ்.மறைக்கோட்ட முதல்வர் வண-ஆர்.எச்.சகாயநாயகம் அடிகள், கிராம சேவையாளர் எஸ்.ஞானசேகரன், பங்குத்தந்தை அருட்பணி ம.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் ஆகியோர் முன்னிலையில் சந்தியப் பிராமணம் செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (160)



சங்கானை விக்னேஸ்வரா வித்தியாசாலையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் பாடசாலை உதவி அதிபர் திருமதி ச.சிவபாலன் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மாணவன் ஒருவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (29)



வயாவிளான், குட்டியப்புலம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

அதன்போது விருந்தினர்கள் மாலை மரியாதையுடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்,

பிரதம விருந்தினரான வலி.வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன் மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: கலைஞன்)*



குளமங்கால் றோ.க.வித்தியாலயத்தில் இடம்பெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதி அதிபர் மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் முதலாவது படத்திலும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அருட்தந்தை நிரூபன் நிசாந்தன் விளையாட்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (29)



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஸ்ரீசற்குணராஜா ஒலிம்பிக் தீபத்தை விளையாட்டு வீரனொருவனிடம் வழங்கி விளை யாட்டுக்களை ஆரம்பித்து வைப்பதையும் யாழ்.பல்கலைக் கழக மொழியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சிவராணி ஸ்ரீ சற்குணராஜா பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை ஈட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## நர்மதா இராஜதுரை

பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை இந்தியாவில் கற்றுப் பின்பு 2004 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தரம் 10இல் இணைந்து எனது படிப்பினைத் தொடர்ந்தேன். இந்தியாவில் இருக்கும்போதே பெற்றோர் இலங்கைக்குச் சென்றால் மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில்தான் படிக்க வைப்போம் என்று கூறி எனக்குள் ஆசையினை வளர்த்து வந்தனர்.

மெதடிஸ்த பாடசாலையில் படித்ததையொட்டி எனக்குச் சந்தோஷமும், புகழும் கிடைத்தது. ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று உயர்தரத்தில் கலைப்பிரிவினைத் தெரிவுசெய்து கற்று வந்தேன். கலைப் பிரிவினை தெரிவு செய்ததன் நோக்கம் நான் தமிழ் மீது கொண்ட ஆர்வம் ஆகும். ஆனால் எனது பெற்றோருக்குக் கணிதப் பிரிவில்தான் என்னைப் படிக்க வைக்க விருப்பமாக இருந்தது. ஆனாலும் எனது விருப்பத்திற்கு எவ்வித இடையூறும் இன்றிக் கலைப்பிரிவில் படிக்கச் சம்மதம் தெரிவித்து உதவியாக இருந்தார்கள்.

எமது படிப்பிற்கு உறுதுணையாகவும் உதவியாகவும் வழிநடத்திச் சென்ற அதிபருக்கு இந்நேரத்தில் நன்றி சொல்ல விரும்புகிறேன். அடுத்து எனக்குக் கல்வியினைப் போதித்த ஆசிரியர்களுக்கும் எனது படிப்பிற்குத் துணையாக இருந்த பெற்றோருக்கும், எனது நண்பர்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிலையத்தில் கல்வியினை வழங்கிய ஆசிரியர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது படிப்பிலும், செயற்பாட்டிலும் அக்கறை கொண்டுள்ள மாமாமார்களுக்கும் இந்நேரத்தில் நன்றியினைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பரீட்சை நேரத்தில் என்னுடன் இரவு பகலாகப் போராடிய எனது பாட்டிக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். ஏனெனில் நான் தூங்கிவிட்டாலும் எனக்கு முன்னே எழுந்து என்னை எழுப்பிப் படிக்கவைப்பார் அவர்.

பரீட்சைக்கு முன்பு பகலில் எல்லாம் படிக்க மாட்டேன். இரவிலும் காலையிலும் படித்த படிப்புத்தான் என்னுடன் கூடவே வந்து உதவியது. பரீட்சைக்காக விடுமுறை விடப்பட்ட காலத்தில் தான் அதிக ஊக்கத்துடன் கற்றேன். எனது எதிர்கால இலட்சியம் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக வரவேண்டும். எனது கல்விக்கு எனது வீட்டில் அனைவரும் உதவியாக இருந்தார்கள். எனது செல்லத் தங்கையும் என்னுடன் படிப்பிற்காகத் துணைநின்று செயற்பட்டார்.



## ஜனனி பஞ்சாட்சரம்

பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

சிறுவயது முதலே ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற விருப்பம் எனக்குள் இருந்தது. அது இப்போது நிறைவேறிவிட்டது.

நான் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் எனது ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்துவிட்டு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் உயர்தரக் கல்விக்காகச் சேர்ந்தேன்.

முயற்சி செய்தால் உலகில் அடையமுடியாதது என்று எதுவுமில்லை என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு, கற்றலில் ஈடுபாடு காட்டினேன்.

பரீட்சையில் நேரம் போதாமை ஒரு சிக்கலாக இருக்கும். எனவே ஒவ்வொரு வினாவுக்கும் எவ்வளவு நேரம் எடுக்கவேண்டும் என்பதை ஏற்கனவே திட்டமிட்டு அதற்கேற்ப வினாக்களை விரைவுபடுத்திச் செய்தேன்.

மூன்று பாடங்களையும் தெளிவாக விளங்கி கடந்தகால வினாப்பத்திரங்கள், வேறு பயிற்சி வினாத்தாள்களைச் செய்து பார்த்தேன். படிக்கும் காலத்தில் சிறிது நேரத்தையும் வீணடிக்காது படித்தேன்.

பரீட்சையின்போது ஓரளவு எதிர்பார்த்த வினாக்கள் வந்தன. ஆனால் பரீட்சைக்குச் செல்லும்போது எல்லாவற்றையும் படித்துக்கொண்டு சென்றேன். சிறப்பாகப் பரீட்சையை எழுதியதால் இப்பேறுபேற்றை எதிர்பார்த்தேன்.

என்னுடைய கனவை நனவாக்குதலில் என்றும் உறுதுணையாகச் செயற்பட்ட அம்மா, ஆசிரியர்கள், அதிபர், சகோதரி, நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும் என் நன்றிகள். நான் எதிர்காலத்தில் வைத்தியராகிச் சமூகத்திற்குச் சேவை செய்ய விரும்புகிறேன்.



## கருணதீபா சிவபாதசுந்தரம்

பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

உயர்தரத்தில் உயிரியற்துறையினை எனது விருப்பத்தின்படி தேர்வுசெய்தேன்.

பெற்றோர், சகோதரர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் எனது வெற்றிக்குக் காரணமானவர்கள்

வழமையாகப் பல்தேர்வு வினாவிற்கு விடையளிக்கும்போது எனக்குத் திருப்தி கிடைப்பதில்லை. இதனால் ஒவ்வொன்றும் செய்தபின்பும் மீளமீளச் செய்து பார்ப்பேன். இதனால் நேரம் போய்விடும். அதனால் இம்முறை பரீட்சை வினாவிற்கு விடையளிக்கும்போது இறுதியாகத்தான் திருப்பிப் பார்த்ததனால் நேரம் போதியதாக இருந்தது.

கடந்தகால வினாப்பத்திரங்களை ஆசிரியர்களின் வழிகாட்டலின்படி, தரப்பட்ட நேரத்திற்குச் செய்து பார்த்தேன். ஓரளவிற்கு எதிர்பார்த்த வினா வந்தது. ஆனால் நான் எல்லாவற்றையும் படித்தேன். எதையும் தவிர்க்கவில்லை. இப்பெறுபேற்றை எதிர்பார்த்தேன். எதிர்காலத்தில் மக்களுக்கு என்னால் இயன்றவரை அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும். நான் இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது தளராத மனமும் நம்பிக்கையும்தான் காரணம். இதற்காக நான் நன்றி சொல்ல வேண்டியது இறைவனுக்குத்தான்.



## கஜனி நித்தியானந்தராஜா

பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

மனந்தளராது முயற்சி செய்தால் விரும்பிய இலக்கு கிட்டும் என்பதில் எனக்கு எப்போதுமே நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கைதான் இன்று எனக்குச் சிறப்பான பெறுபேற்றை அடைய உதவியுள்ளது.

நான் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் எனது ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்து, பின்பு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இணைந்தேன். ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் 9ஏசி என்ற சிறப்பான பெறுபேற்றை அடைந்து, உயிரியல்துறையைத் தெரிவுசெய்தேன். எல்லாப் பாடங்களையும் சீராகக் கற்றேன். எனினும் பரீட்சையின்போது விடையளிப்பதற்கான நேரம் எனக்குப் போதாததாக இருந்தது. இதனால் சிறப்பான பெறுபேறு வருமென நிச்சயமாகக் கூறமுடியாதிருந்தது. ஆயினும் 2ஏபி என்னும் சிறந்த பெறுபேறு கிடைத்துள்ளது.

இந்த வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்த பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.



## கலையரசி இராஜரட்ணம்

பெறுபேறு: 2ஏபி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை ஞானசாரியார் கல்லூரியில் கல்வி கற்று எனது பாடசாலை ஆசிரியர்களாலும் எனது தாயாரின் ஊக்குவிப்பினாலும் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று எனது இடைநிலைக்கல்வியையும் உயர்கல்வியையும் மேற்கொள்வதற்குச் சிறந்த பாடசாலையென்று மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையினைத் தெரிவு செய்து எனது கல்வியைத் தொடர்ந்தேன். பின்பு சுயமுயற்சியாலும், பாடசாலை ஆசிரியர்களாலும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில 3ஏ2பி2சி2எஸ் என்ற பெறுபேற்றினைப் பெற்றேன். பின்பு நடைமுறையில் சிறந்த துறையென எல்லோராலும் கூறப்படும் துறையாகிய வர்த்தகத் துறையினைத் தெரிவுசெய்வதற்குச் சிறந்த ஆலோசனைகளையும் அத்துறையின் அனுகூலங்களையும் எனக்குப் புரியவைத்து என்னைத் தற்போதைய சிறந்த நிலையைப் பெறுவதற்கான பாடத்தெரிவிற்கு உதவிய பெருமை எனது அண்ணா, தற்போது கொழும்பில் கணக்காளராகிய கமலதாஜனையே சேரும்.

பின்பு எனது கல்வியைச் சிறந்த முறையில், கடினமின்றி இலகுவான முறையில் கற்பதற்கான நூல்களையும், சிறந்த ஆலோசனைகளையும் வழங்கிய எனது மூன்று அண்ணன்மாருக்கும், அக்காவிற்கும் எனது பெறுபேற்றினைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் எனது பெற்றோரும், சகோதரர், சகோதரிகளும் எனக்கு உறுதுணையாக நின்றார்கள்.

எனது மூன்று பாடங்களையும் சிறந்த முறையில் சந்தேகங்களின்றி கல்வி கற்பதற்கு வழிகாட்டல்களையும் ஊக்குவிப்பினையும் வழங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகளுக்குரியவர்களாவர்.

நான் பரீட்சைக்குக் கல்வி கற்ற முறையாக, பாடங்களைக் கடினமென்று நினைக்காமல் என்னால் முடியும் என்று நினைத்தால் எதனையும் இலகுவாக வெல்லமுடியும் என்பதாகும்.

நான் சிறந்த பாடத்தெரிவினை மேற்கொண்டதனைப் போல் எமது பாடசால்லக்கும், குடும்பத்திற்கும், சூழலுக்கும் சிறந்த பெருமையைச் சேர்க்கத்தக்கவாறு எனது துறையுடன் சேர்ந்த சிறந்த அந்தஸ்துடைய உயர்தொழிலில் ஈடுபடல்வேண்டும் என்பதாகும்.

சந்திப்பும், படங்களும்: ஔண்யன், அருணன் கணேசமூர்த்தி. 34



## வானதி விநாயகராசா

பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக்கல்வியை நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பயின்றேன். பின்னர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். எனது மாமாமார் கவிதை, நாடகத்துறைகளில் இணைந்திருந்தமை நான் உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தெரிவுசெய்வதற்கு உந்துசக்தியாக அமைந்தது. இதனால் நான் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன். எனது தாய், தந்தையர் வறுமைச் சூழலையும், தமது சுகயீனங்களையும் கருத்திற்கொள்ளாது எனக்களித்த ஊக்கம் நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற உந்துதலை சிறுவயதிலிருந்தே எனக்களித்தது. இந்தவகையில் நான் எனது பெற்றோருக்கு முதலில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். அடுத்து எனது கல்விக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், மாமா, அத்தை, சகோதரர்கள், நண்பிகள் அனைவருக்கும் நான் இத்தருணத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் எந்தவொரு விடயத்தையும் ஆழமாக ஆராய்ந்து விளங்கிக் கற்றமையே நான் இப்பெறுபேற்றை அடைவதற்குக் காரணமாய் அமைந்தது. இதற்காக எனது ஆசிரியர்கள் மிகவும் உதவினார்கள்.

எதிர்காலத்தில் கல்வித்துறையில் மேன்மேலும் சாதனைகள் புரிந்து சமூகத்திற்குச் சேவை வழங்கக்கூடிய ஒரு தொழிலை மேற்கொள்ளவேண்டும் என்பதே எனது இலட்சியம்.

எனது பாடத்தெரிவு வெட்டுப்புள்ளி பற்றிய பிரச்சினையை எனக்கேற்படுத்தியது. இருப்பினும் "செய்வன திருந்தச் செய்" என்ற எனது அன்னையின் அன்பான வார்த்தைகள் எனக்கு நம்பிக்கையை மேலும் வளர்த்ததால், கற்கும் பாடத்தைப் பூரணமாகக் கற்றமை என் சவாலை எதிர்கொள்ளக் காரணமாக அமைந்தது.



## திவ்யா அரியநாயகம்

பெறுபேறு: 3ஏ (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

நான் எனது ஆரம்பக் கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று பின்னர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். எனது விருப்பத்தின் காரணமாகக் கலைத்துறையைத் தெரிவு செய்தேன். கலைப் பிரிவில் தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன்.

நான் இப்பெறு பேற்றைப் பெறுதவதற்கு எனது அப்பாவின் பங்களிப்பு முக்கியமானது [illegible] அம்மாவும், பெரியம்மா [illegible] துணையாக இருந்தனர்.

கல்விச் செயற்பாட்டில் என்னை வழிப்படுத்திய பாடசாலை அதிபருக்கும், உப அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

எனது பாடத் தெரிவில் உள்ள வெட்டுப்புள்ளி பிரச்சினை காரணமாக மூன்று பாடங்களிலும் அதிகூடிய புள்ளியை பெற வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. இதனால் மூன்று பாடங்களுக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து ஆழமாகக் கற்று இந்தச் சவாலை எதிர்கொண்டு மாவட்ட நிலையில் 3ஆம் இடத்தைப் பெற்றமை மகிழ்ச்சியை அளிக்கின்றது.

எனது தந்தையின் விருப்பப்படி சமூகத்திற்குச் சேவையாற்றக் கூடிய நல்ல தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும்.



## சாலினி ஜெயபாலச்சந்திரன்

பெறுபேறு: 3ஏ (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் உண்டு. அத்துடன் தமிழ் இலக்கியங்களில் இருந்த ஆர்வமும் நான் கலைப்பிரிவினைத் தெரிவு செய்யக் காரணமாக இருந்தது.

பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் எனது வெற்றிக்குக் காரணமானவர்கள். பரீட்சையின்போது வினாக்களிற்கு விடை எழுத நேரம் போதாது இருந்தது. ஆனால் ஆசிரியர்களின் வழிகாட்டலினால் வினாக்களுக்கு விடை எழுத நேரம் ஒதுக்கி எழுதிப் பழகினேன். சிறப்பான பெறுபேற்றை எடுப்பதற்கு வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும்போது கவனமாகக் கேட்டு வகுப்பிலேயே மனப்பாடம் செய்வேன். குறிப்புகள் எடுத்துக்கொள்வேன். பின் அந்தக் குறிப்புகளை வைத்து நானே சுயமாக எழுதிப் பார்ப்பேன். எனது சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டுத் தீர்த்துக்கொள்வேன்.

இதனால் பரீட்சையை இலகுவாக எழுத முடிந்தது. இந்தப் பெறுபேறு வரும் என முன்னரே எதிர்பார்த்தேன்.

எனக்குச் சிறுவயதில் இருந்தே சட்டம் கற்கவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அதனால் எதிர்காலத்தில் சட்டத்துறையைக் கற்கவே விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் இலவச கணனிக் கற்கைநெறி அண்மையில் சாவகச்சேரி சாம் கணனி பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து உரையாற்றுவதையும், பிராந்தியத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் பயிற்சியினை ஆரம்பித்து வைப்பதையும், பயிற்சியில் கலந்து கொண்ட மாணவிகளில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: தென்னவன்)


## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
19,முருகேசர் லேன், நல்லூர். (83304)


## விண்ணக வாழ்வின் 11 ஆம் ஆண்டு நினைவுகளின்.....

பிறப்பு 11 ★ 06 ★ 1973



இறப்பு 11 ★ 03 ★ 1998

### திருமதி றொமின் அன்ரனிற்றா ஜோ வலன்ரைன்

''ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்து பாருங்கள்''
தி.பா.34;8

நித்திய வாழ்வின் நீண்ட இன்பத்தில்
உன்னத கடவுளின் பேரன்பில் உறைந்திருக்கும் உங்களை
நீங்கா.....நினைவுகளோடு இன்நாளில்
நினைந்து செபிக்கின்றோம்.
நாமெல்லாம் ஒரு நாள் சந்திப்போம் என்ற நம்பிக்கையில்.

*40, ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (82423)

செபங்களுடன்:
**குடும்பத்தினர்.**

## அழியா நினைவில் ஈராண்டு



### அமரர் சண்முகம் செல்லத்துரை

பிறப்பு: 24.04.1930 இறப்பு: 05.03.2007

திதி: 11.03.2009

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்- எம்
மனதில் நீங்காது வாழும்
எமது குடும்பத் தலைவரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சந்நிதி றோட்,
வருணன், அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## சர்வோதய வளாகத்தில் அறநெறிப் பாடசாலை

நல்லூர்,மார்ச் 11

புங்குடுதீவு சர்வோதயத்தின் முன்னாள் தலைவர் அமரர் திருநாவுக்கரசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை சர்வோதய வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

45 மாணவர்கள் வரை இங்கு கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கான மதிய உணவு சர்வோதயத்தால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை புங்குடுதீவு கிழக்கு வரசித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு புங்குடுதீவு சர்வோதயத்தால் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(203-111)

## உதவிக் கொடுப்பனவு

கோப்பாய், மார்ச் 11

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் அங்கவீன முற்ற 7 குடும்பங்கள் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டு கடந்த 2007ஆம் ஆண்டு தொடக்கம் மாதாந்தம் 3 ஆயிரம் வீதம் கொடுப்பனவை பெற்று வருகின்றார்கள்.

இவர்களுக்குரிய 2009ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கீடு அங்கவீன முற்றோர் தேசிய செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2009 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய கொடுப்பனவு இந்த வாரத் தொடக்கத்தில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள து.

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
## கிளைக்குழுத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்

01. 2009.02.28ஆம் திகதியில் பூர்த்தியாக்கப்பட்ட 44 சங்கக் கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்க்காணும் கிளைகளில் 2009.03.11ஆம் திகதி தொடக்கம் 2009.03.23ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| காட்சிப்படுத்தும் இடம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் |
|---|---|---|
| 01. துர்க்காபுரம் 02 | 01 | தெல்லிப்பழை |
| துர்க்காபுரம் 02 | 02 | துர்க்காபுரம் |
| 02. கிளை 03 | 03 | வவுணாவத்தை |
| 03. கட்டுவன்புலம் 34 | 34 | தெல்.அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் |
| 04. உடுவில் | 33 | மடத்தடி |
| உடுவில் | 04 | விராங்கொடை |
| உடுவில் | 06 | விழிசிட்டி |
| 05. சித்தங்கேணி | 09 | கீரிமலை |
| 06. இணுவில் சந்தி | 11 | காங்.நடேஸ்வராக் கல்லூரியடி |
| இணுவில் சந்தி | 10 | சிமெந்து தொழிற்சாலையடி |
| இணுவில் சந்தி | 27 | காங்கேசன்துறை |
| இணுவில் சந்தி | 14 | கொல்லங்கலட்டி |
| 07. கந்தரோடை | 12 | மாவிட்டபுரம் |
| கந்தரோடை | 38 | மாங்கொல்லை |
| 08. இணுவில் மத்தி | 13 | மாவிட்டபுரம் மத்தி |
| இணுவில் மத்தி | 16 | கட்டுவன் |
| இணுவில் மத்தி | 29 | வீமன்காமம் |
| 09. உரும்பிராய் | 17 | குரும்பசிட்டி |
| உரும்பிராய் | 35 | மாவை கலட்டி |
| உரும்பிராய் | 40 | குரும்பசிட்டி கிழக்கு |
| 10. மயிலணி | 41 | கிளானை |
| மயிலணி | 25 | மயிலிட்டி கிழக்கு |
| 11. தாவடி | 15 | வறுத்தலை விளான் |
| தாவடி | 30 | தையிட்டி |
| தாவடி | 31 | ஊறணி |
| தாவடி | 28 | வீமன்காமம் வடக்கு |
| 12. பன்னாலை 5 | 05 | பன்னாலை |
| 13. குட்டியப்புலம் | 19 | ஒட்டகப்புலம் |
| குட்டியப்புலம் | 20 | வசாவிளான் மத்தி |
| குட்டியப்புலம் | 18 | வடமூலை வசாவிளான் |
| குட்டியப்புலம் | 39 | குட்டியப்புலம் |
| 14. அச்சுவேலி | 21 | பலாலி மேற்கு |
| அச்சுவேலி | 22 | பலாலி மத்தி |
| அச்சுவேலி | 23 | பலாலி கிழக்கு |
| அச்சுவேலி | 37 | ஊரங்குணை |
| 15. இளவாலை 08 | 08 | இளவாலை |
| இளவாலை 08 | 07 | கருகம்பனை |
| இளவாலை 08 | 44 | மயிலங்கூடல் |
| 16. சீந்திப்பந்தல் | 43 | சீந்திப்பந்தல் |
| 17. இளவாலை 43ஏ | 36 | வசந்தபுரம் |
| 18. தலைமைக்காரியாலயம் | 24 | மயிலிட்டித்துறை |
| தலைமைக்காரியாலயம் | 26 | மயிலிட்டி வடக்கு |
| தலைமைக்காரியாலயம் | 32 | ப்லாலிச் சந்தி |
| தலைமைக்காரியாலயம் | 42 | திருப்பூர் மயிலிட்டி |

தலைமைக் காரியாலயம் 44 கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள்.

02. காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் சங்க உப விதிப்படி வாக்காளர் ஆவதற்குத் தகுதி இருந்தும் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களும் முழுப் பெயரிலோ அல்லது முகவரியிலோ அல்லது வேறு ஏதும் பிழை உள்ளவர்களும் தமது ஆட்சேபனையை 2009.03.25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகச் செயலாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஞா.பாரதி
செயலாளர்,
தெல்லிப்பழை பல.நோ.கூ.சங்கம்.

தெல்லிப்பழை.

(சி/557465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் இப்போது முக்கியத்துவம் பெற்றுவரும் பொது அறிவு

பொது அறிவு என்னும் விடயப் பரப்பு இன்று பலருக்கும் தேவைப்படும் ஒன்றாக உள்ளது. போட்டிப் பரீட்சைகள், நேர்முகப்பரீட்சைகள், உள் நுழைவுத் தேர்வுகள். 2000ஆம் ஆண்டு முதல் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்குப் பொதுச் சாதாரணப் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றுவோருக்குப் பொதுஅறிவு எனும் பாடம் பற்றிய அறிவு தேவைப்படுகின்றது.

அண்மைக்காலப் பொது அறிவுப் பரீட்சை வினாத்தாள்கள் நடைமுறை சர்வதேச விவகாரங்கள், இலங்கையின் நிகழ்வுகள் குறித்து கூடுதல் அக்கறை செலுத்துகின்றன. இந்த நடைமுறை சர்வதேச, இலங்கை நிகழ்வுகள் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மாற்றத்தைக் கண்டுவிடும். அவற்றையும் பிற பொது அறிவுத் தகவல்களையும் எவ்விதம் வகுத்துத் தொடுக்கவேண்டுமென்ற




வழிகாட்டலைத் தர இக்கட்டுரை முற்படுகின்றது.

பொது அறிவை வளர்க்கும் நோக்குடன் 3 'சிஆர்' கொப்பிகளை வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு கொப்பியில் என்றும் மாற்றமடையாத வரலாற்று ரீதியான தகவல்களைக் குறித்து வாருங்கள்.

உதாரணம்: வானொலியைக் கண்டுபிடித்தவர் - மார்க்கோணி.

யாழ்.நூல் எழுதியவர் - சுவாமி விபுலானந்தர்.

மற்றைய கொப்பியில் சிறிது காலத்தின் பின்னர் மாற்றமுறக் கூடிய தகவல்களைக் குறித்து வாருங்கள்.

உதாரணம்: பிரித்தானிய பிரதமர்- கோர்டன் பிறவுண்.

இந்திய ஜனாதிபதி: பிரதீபா பட்டேல்.

மூன்றாவது கொப்பியில் மாதாந்தம் உலகில், உள் நாட்டில் நிகழும் நிகழ்வுகளை மாதம் மாதம் குறித்து வாருங்கள்.

உதாரணம்: 2008 டிசெம்பர் -ஆபிரிக்க நாடான கினியாவில் ஜனாதிபதி இறந்த பின்னர் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இவ்விதமாகக் கொப்பிகளில் குறித்து வரும் தகவல்களை அவ்வப்போது ஓய்வுநேரங்களில் படித்து வாருங்கள். திரும்பத் திரும்ப கிரகித்துப் படித்து வரும்போது அவை உங்கள் மனதில் பதிந்து கொள்ளும்.

மிக முக்கியம் என்னவென்றால் இவ்வாறு தகவல்களைச் சேகரிக்கும் முயற்சியில் இடைவிடாத தளராத ஊக்கத்துடனும், விருப்பத்துடனும் ஈடுபடுவதேயாகும்.

உங்களது நாளாந்த சுயமான தேடலின் மூலமே பொது அறிவில் இயல்பான ஆற்றலைப் பெறமுடியும்.

பொது அறிவு வினாத்தாள்கள் இந்த விடயங்களைத்தான் கொண்டிருக்குமென வரையறை செய்யமுடியாது. எந்தக் கோணத்திலிருந்தும், எந்தத் துறைகளிலிருந்தும் வினாக்கள் கேட்கப்பட முடியும்.

அவற்றுக்கு உங்களை நீங்களே தயார்ப்படுத்திக் கொள்வதில்தான் வெற்றிகரமான பெறுபேறுகள் தங்கியுள்ளன. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, நூல்கள், பருவ இதழ்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், துண்டுப்பிரசுரங்கள், கலைநிகழ்வுகள், கணனி, இன்ரநெற் போன்ற பல்துறை மூலகங்களிலிருந்து பெறுகின்ற தகவல்களைக் குறித்து வைத்துக் கற்பதன் மூலமாகப் பொது அறிவைப் படிப்படியாக மேம்படுத்திக்கொள்ளலாம்.

## அறிவுத் தேடலில் சுயமாக ஈடுபட்டு அதனை வளர்த்துக் கொள்ள வேண்டும்

பொது அறிவு எனும் பாடப்பரப்பு பொது உளச்சார்பு, பொது விவேகம், நுண்ணறிவு ஆகிய பாடங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இம்மூன்று பாடங்களும் ஏறத்தாழ ஒரே தன்மையினதாக உள்ளன. சொற்றொடர்கள், எண்கள், தர்க்கம், கிரகித்தல், கணிதம் போன்றவற்றை உள்ளடக்கிய வினாக்களை இப்பாடங்கள் கொண்டிருக்கும்.

ஆனால் பொது அறிவு தேசிய, பிராந்திய மற்றும் உலகம் பூராகவும் உள்ள பல தரப்பட்ட அமைப்புச் சுற்றாடலிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல், விஞ்ஞானம், பொருளாதாரம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் உள்ள பரீட்சார்த்தியின் அறிவையும், தெளிவையும் அளவிடும் பாடப்பரப்பு. இத்தகைய பாடங்களுக்கிடையிலான உள்ளார்ந்த வேறுபாட்டைப் பலரும் சரியாக உணர்ந்து கொள்ளாத நிலையைச் சமூகத்தில் காண முடிகின்றது. இதனால் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றும்போது தவறுதலாக வேறு விடயத்தைக் கற்கின்றனர். பரீட்சை மண்டபத்தில் வைத்துத்தான் வினாத்தாள் என்னவென்பதையே அறிந்துகொள்கின்றனர். இது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டும். பரீட்சையின் வினாத்தாள் எத்தகையதாக இருக்குமென்பதை அறிந்து கற்பது பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு மிகமிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது.

கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களைச் சேகரித்து வினாக்களின் கட்டமைப்பு எவ்விதம் இருக்கும் என்பதையறிந்து கொள்ளல்வேண்டும். இது பரீட்சையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று இலக்கையும் அடைய வழிவகுக்கும். பரீட்சைக்கு அனுமதி அட்டை வந்தவுடன் விழுந்தடித்துப் பொது அறிவுப் புத்தகங்களைத் தேடிப் பிடித்துக் கற்பதை விட தாமாகச் சுயமாகக் கற்பது நிறைவைத் தரும். ஆனாலும் எம்மில் அநேகர் சோம்பலாக இருந்து புத்தகப் பூச்சிகளாக இருப்பதில்தான் ஆர்வம் காட்டுகின்றோம். இந்நிலையை மாற்றி அறிவுத் தேடலில் சுயமாக ஈடுபட்டுப் பொது அறிவை வளர்த்துக்கொள்வோம்.

திருமதி சற்குணேஸ்வரி தபேந்திரன்,
ஆசிரியை,
கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி.

# உலக மயமாக்கலின் பின்னணியில் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்

கல்வித் திட்டங்களில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் என்பது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் பின்னணியாக அமைகின்றது. இன்று தகவல் மூலம் உலகம் நிர்வகிக்கப்படுகின்றது. கணத்துக்குக் கணம் தகவல் பரிமாற்றப்படும் தொழில்நுட்பத்திறன் வளர்ச்சியடைந்துள்ளது. தொடர்புமுறை என்பது வலையமைப்பினூடாக கணிசமான அளவு பரிமாற்றப்படுகிறது. தகவல் பரிமாற்றத் தேவையில் ஊடகம் முக்கிய இடம் வகிக்கின்றது. ஊடகங்கள் ஊடான தொடர்பும் அதனூடான தகவல் பெறுகை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. ஊடகம் வழியான அறிவு பெறுகை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. ஊடகம் வழியான அறிவு பெறுகை என்பது மனிதனுடன் நெருங்கிய கருவியாக மாற்றம் பெற்றுள்ளது. இதற்கு, மனிதனிடம் தகவல்களைச் சேர்ப்பிப்பதில் ஊட

## தரம் -10, 11 மாணவர்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

கங்கள் உயர் விருப்பையும் மனப்பாங்கையும் அறிந்து அதற்கு ஏற்ற வகையில் வாசகர் உணர்வு நிலை நின்று தகவல் வழங்கப்படுவதே முக்கிய காரணமாகக் குறிப்பிடமுடியும்.

வாசகர்கள் தொடர்பு ஊடகங்கள் மூலம் பெறும் தகவல்கள் சாதகமாகவும் அதே வேளை குழப்பங்களை விளைவிப்பதாகவும் அமைகின்றன. பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி, ஊடாக சமூகத்திற்குத் தகவல்களைப் பரிமாற்றுவதில் கணிசமான பங்கை இவை வகிக்கின்றன. மேலைத்தேய நாடுகளைப் பொறுத்தமட்டில் வலையமைப்பு வழி ஊடான தகவல் பெறுகை ஆட்சி நிலவுகிறது. இவ்வேறுபாட்டுக்குப் பொருளாதார அபிவிருத்தி மட்டம் பின்னணிக் காரணமாக அமைகிறது.

இருபதாம் நூற்றாண்டில் கல்வியியலாளர்கள் கடினமானதும் தவிர்க்கமுடியாததுமான ஒரு சவாலை எதிர்நோக்கியுள்ளனர். மாணவர்கள் தொடர்பாடல் ஊடகங்களில் இருந்து கிடைக்கும் செய்திகளினால் குழம்பிப்போயுள்ளனர். தொலைக்காட்சி நகைச்சுவை நிகழ்ச்சிகள் சினிமா, நகைச்சுவை பருவ இதழ்கள் - அறிவியியல் புனைகதை படைப்புகளுடன் ஒப்பிடும்போது கணிதம் இலக்கணப் பயிற்சி ஆகிய பாடங்கள் சுவையற்றதும், கடினத் தன்மை வாய்ந்தனவாக மாறியுள்ளது. (ஆன்மரியசான்ட் - ஊடகவியற்கல்வி) எனக் குறிப்பிட்டுள்ளமை பற்றிச் சிந்திக்கப்படவேண்டியது முக்கிய கருத்து நிலையாக அமைகின்றது.

''பொறுப்புவாய்ந்த பிரஜையை உருவாக்குதல்'' என்ற கல்விக் குறிக்கோள்களின் நோக்கத்தில் ஊடகம் முக்கிய பங்கு பெறுகிறது. ஊடகத்தின் ஒழுக்கமும், நோக்கும் இதனை மையப்படுத்திதாகவே உள்ளது. நாட்டின் அபிவிருத்தியில் ''கல்வித் தர விருத்தி'' முக்கியமானது. சமூக அமைப்பில் கல்வி அடிப்படையானது. கற்கை சந்தர்ப்பம் முறையானதாகவும் முறைமை சாராததாகவும் இடம்பெறச் சாத்தியங்கள் உள்ளன. ஊடகம் மூலம் கற்கை என்பதில் முதலாம் நிலையாகவும் இரண்டாம் நிலையில் உதவிச் சாதனமாகவும் கருவிகள் பயன்படுவதைக் காணலாம். கல்விச் செயற்பாடுகளில் ஊடகங்கள் பலவகையில் நேரடி மறைமுகக் கருவிகளாக அமைகின்றன.

இத்தகைய பின்னணியில் எமது நாட்டில் உள்ள ,கலைத்திட்டத்தில் தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை மறுசீரமைப்பில் (2007) மேலதிக பாடங்களில் ஒன்றாக இடைநிலைத் தரங்களான 10, 11இற்கு அறிமுகம் செய்யப்படுகின்றது. தரம் 10, 11இற்கு வாரம் 3 மணித்தியாலப் பாடவேளை கொண்டதாகப் பாடத்தொகுதி மூன்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உலகமயமாக்கல் பின்னணியில் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் முக்கிய இடத்தை வகிப்பதுடன், தகவல் அறிக்கை, தகவல்களை வழங்குதல், அதனைத் தெரிவு செய்யும் வாசகனின் சுயாதீனப் போக்கைக் கட்டியெழுப்புதல் என்பன எமது நாட்டைப் பொறுத்தமட்டில் அவசியமாகின்றது. இதனை விருத்தி செய்வதற்கு இத்துறையைப் பாடசாலைக் கலைத்திட்டமாக மாற்றியமைப்பது அவசியமாகின்றது.

2000ஆம் ஆண்டில் இலங்கையில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 17 கல்விக் கோட்டங்களில் 125 பாடசாலைகளில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட பாடசாலை ஊடகவியற் கழக வேலைத்திட்டத்தின் அனுபவங்களினூடாகப் பாடசாலைத் தொகுதியில் ஊடகக் கல்விக்குக் கேள்வி இருப்பது தெரியவந்தது. 2000ஆம் ஆண்டில் 460 பாடசாலைகளில் தபால்மூலம் மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல் ஊடகக்கல்வி ஆய்வின்போது 290 பாடசாலைகள் அதற்குப் பதில் அனுப்பின. இத்தகைய மதிப்பீடுகள் பாடசாலையில் தொடர்பாடல் ஊடகக் கற்கை கற்பிக்கப்படுவதை 80% உறுதிப்படுத்தின. இதன் பிரதிபலிக்கத் தேசிய கல்வி நிர்வாகப் பேரவை அங்கீகரித்து முதலில் இடைநிலை மட்டத்திலும் பின்னர் உயர்தர நிலையிலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

### பாடத்திட்டத்தின் குறிக்கோள்

தொடர்பாடல் ஊடகவியற் கற்கைப் பாடம் பின்வரும் முக்கிய இலக்கை அடைவதற்காக முன்னெடுக்கப்படுகின்றது. கலைத்திட்டக் குறிக்கோள் பாடத்தின் அலகுகள் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தப்படுகின்றது. தொடர்பாடல் செயலொழுங்கு மற்றும் மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்பை விளங்கிக்கொள்ளல், ஆக்கரீதியான தொடர்பாடல் ஊடாக ஆய்வினை விரிவடையச் செய்தல், சீரான சமூகத்தைக் கட்டியெழுப்ப ஊடகத் தேர்ச்சியை மேம்படுத்துதல், ஊடகமொழிப்பாவனை திறன்விருத்தி, ஊடகக் கட்டமைப்புத் தேர்ச்சி, ஊடக தொடர்பாடல் சார் கோட்பாட்டு அடிப்படை அறிகை, தொடர்பாடல் ஊடக தொழில்சார் கற்கைக்கான விளக்கத்தைக் கொடுத்தல், சர்வதேச உள்நாட்டு ரீதியில் ஊடகத் தனித்துவத்தைப் பேணுதல், பொறுப்பான வகையில் ஊடகச் செயற்பாட்டை முன்னெடுக்கத் தயார்ப்படுத்தல், திறன், மனப்பாங்கு, அறிவு, பயிற்சி என்ற அடிப்படையில் வளர்ச்சியடையச் செய்தல் என்பன எதிர்பார்க்கப்பட்டுத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறுக்குக் கலைத்திட்டம் எனது மாணவர் அடைவதற்கான உள்ளடக்கத்தைக் கொண்டது. இதனை 'Colour filter' என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இவற்றினூடாகச் சமூகத் தேவைக்கு ஏற்ப கலைத் திட்டம் கட்டியெழுப்பப்படுகின்றது. குறுக்குக் கலைத்திட்டத்தினூடாக பாடத்தின் முழுமையை ஆராய்வதும் நோக்குவதும் மாணவர், ஆசிரியர் பொறுப்பாக அமைகின்றது. பொதுவாக பாடத்திட்ட உருவாக்கத்திற்கு இவ்வமைப்பு உதவுகிறது. இருப்பினும் முதல்தடவையாக இக்கருப் பொருளை மையமாகக் கொண்டு பாடத் திட்டம் தயாரித்தல் இப்பாடத்திற்கே ஏற்படுத்தப் பட்டுள்ளது.

ப.இராஜேஸ்வரன்,
ஆசிரியர், வண்ணை நாவலர் ம.வி.

(வளரும்)



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டபோது உதயன் பணிமனைக்கும் வருகை தந்தனர். இதில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.
(படம்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் தயாரிப்பான 'பட்டாம் பூச்சிகள்' இறுவட்டு நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராஜா, பட்டாம்பூச்சிகள் அபிநயப் பாடல்கள் இறுவட்டு தயாரிப்பாளர் திருமதி வி.நரேந்திரா ஆகியோர் உரையாற்றுவதை முதல் நான்கு படங்களில் காணலாம்.

இறுவட்டின் முதல் பிரதியை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி திருமதி கிருபானந்தராணி ஸ்கந்தராஜ் பெற்றுக்கொள்வதை ஐந்தாவது படத்தில் காணலாம்.

சிறப்புப் பிரதியை வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பெற்றுக்கொள்வதை ஆறாவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

படங்கள் : லக்ஸ்மன்

# கற்பித்தலுக்கான நுட்பங்களை அறிந்துகொண்டு ஆசிரியர்கள் தம்மை வளப்படுத்திக்கொள்ளவேண்டும்

## 'பட்டாம் பூச்சிகள்' வெளியீட்டு நிகழ்வில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

நல்லூர், மார்ச்11

ஊடகங்கள் மூலம் கற்பித்தலுக்கான தொழில்நுட்ப வளங்களை ஆசிரியர்கள் நன்கு அறிந்துகொண்டு அவைகளினூடாக கற்பிக்கக்கூடியதாக தம்மை வளப்படுத்திக்கொள்ளவேண்டும் என வாழ்நாள்பேராசிரியரும் முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை கூறினார்.

யாழ்.கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா தயாரித்த 'பட்டாம் பூச்சிகள்' அபிநயப் பாடல் தொகுப்பு வெளியீட்டு விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றினார். யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் தலைமையில் கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அந்த விழாவில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை மேலும் பேசும்போது கூறியதாவது:

எமது காலத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கு பின்னடிக்கும் நிலை இருந்தது. இன்று அப்படியல்ல. அதிகாலையிலே சிறுவர்கள் பள்ளிக்குச் செல்வதற்காக வாகனங்களில் காத்து நிற்கின்றார்கள். பள்ளிக்கூடங்கள் இன்று அவர்களுக்கு விருப்புக்குரிய ஓர் இடமாக மாறிவிட்டது. அவர்கள் ஆடல், பாடலுடன் கூடிய செயற்பாடுகளில் மிகவும் விருப்பம் நிறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். வகுப்பறையை நேசிக்கிறார்கள். ஆசிரியர்களும் அதற்கமைவாக வகுப்பறையை நேசிப்பதுடன் ஆடல் பாடல்களின் ஊடாக கற்பித்தலை முன்னெடுப்பின் சிறுவர்கள் மிகவும் விருப்பமுடன் கற்பார்கள். ஊடகங்கள் இன்று கல்வியில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இன்றைய இளைஞர்கள் பாட்டுக்குப் பாட்டு என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பாடல்களை எப்படி அழகாகப்பாடுகிறார்கள். தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சி இதற்கு காரணமாகிறது. தொலைக்காட்சியைப் பார்ப்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும் நல்ல விடயங்களை சிறுவர்கள் மட்டுமல்ல ஏனையோரும் அதன்மூலம் அறிந்து கொள்ளமுடியும். இன்று வெளியிடப்படும் இறுவட்டு, நூல் என்பன சிறுவர்க ளின் மனதில் அவர்களுக்கான பாடல்களை நினைவில் நிறுத் திக்கொள்ளக்கூடியதாக உள்ளது. சிறுவர்களுக்கு உகந்த வகையில் அவை தயாரிக்கப்பட்டுள் ளன. திருமதி விக்னேஸ்வரி ஒரு சிறந்த இசையாசிரியராவார்.

ஒருசமயம் பல்கலைக்கழக இசைத் துறைக்கான பரீட்சைகள் இடம்பெறவேண்டிய சமயம் அதற்குரியவர் பரீட்சையை நடத்த தனிப்பட்ட காரணங்களுக்காக முன்வராத நிலையில் திருமதி விக்னேஸ்வரியின் உதவியுடன் குறிப்பிட்ட பரீட்சையை மிகவும் திறமையாக நடத்தி முடிக்கக் கூடியதாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு திறமைமிக்கவரால் வெளியிடப்படும் இந்த நூல் இறுவட்டுகள் சிறுவர்களுக்கு பயனுள்ளதாக அமையும். தொழில்நுட்பத் துறைகளில் இன்றைய சிறார்கள் எம்மைவிட மிகவும் திறமைபெற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதால் இந்த அறிவு முறையை மிகவும் சிறப்பாக அவர்கள் பயன்படுத்தவேண்டும் என்றார். (111)

சிவமயம்

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

தேவராஜக்குருக்கள் இரவீந்திரக் குருக்கள்



அன்புடையீர்

நிகழும் சர்வதாரி வருடம் மாசித் திங்கள் 17ஆம் நாள் (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை விநாயகர் திருவடி நிழலை அடைந்த எமது குமாரன் அல்வாய் மாலிசந்திப்பிள்ளையார் கோவில் தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

(அ/556043)

| | | |
|---|---|---|
| 2009.03.10 | செவ்வாய்க்கிழமை | தசாகம் மு.ப.10 மணிக்கு |
| 11.03.2009 | புதன்கிழமை | ஏகோதிஷ்டம் மாசியம் |
| 12.03.2009 | வியாழக்கிழமை | சபிண்டீகரணம் |
| 13.03.2009 | வெள்ளிக்கிழமை | கிருஹயக்ஞம் |
| நண்பகல் 12 மணிக்கு | | மதியபோசனம் |

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாலிசந்தி வரதராஜ விநாயகர் தேவஸ்தானம், அல்வாய்.

பிரம்மஸ்ரீ ச.தேவராஜக்குருக்கள் குடும்பத்தினர்.

குறிப்பு: மாலிசந்தி விநாயகர் ஆலய அடியார்கள், தொண்டர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2008 80%OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office<br>3 Months<br>1500/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing<br>3 Months<br>~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing<br>4 Months<br>~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~10000~~ 2000/= | Diploma in Auto CAD<br>3 Months<br>~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package<br>3 Months<br>~~10750~~ 2150/= | Diploma in Computer Science<br>4 Months<br>~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science<br>3 Months<br>~~13000~~ 2600/= |

50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |
| Dip. in. Networking | 5000 |

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.
March 30ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

யாழ்நகரில் ஆரம்பம்
Batch I: 13/03/2009
Batch II: 14/03/2009
Batch III: 15/03/2009
Batch IV: 18/03/2009
09.00 AM

நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 12/03/2009
Batch II: 14/03/2009
Batch III: 15/03/2009
Batch IV: 17/03/2009
09.00 AM

வட மாகாண ஆசிரியர் சங்கச் சகாயநிதி
N. P. T. A. Benevolent Fund
(ESTD 13.8.60 - Incorporated By Parliament Act No. 18 of 1968)
நாற்பத்தொன்பதாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

சகாய நிதியின் அடுத்த வருடாந்தப் பொதுக்கூட்டம் 2009 மார்ச் மாதக் கடைசி வாரத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரேரணைகள் அனுப்ப விரும்புவோர் அவற்றை 21.03.2009 ஆந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

29/5, நக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

சண். தயாளன்
செயலாளர்

கண்ணீர் அஞ்சலி




தேவராஜக் குருக்கள்
இரவீந்திரக் குருக்கள்

எமது பிரதேச செயலக சைவ ஆலோசனை சபையின் உறுப்பினராக இருந்து எமது சமய செயற்பாடுகளுக்கு ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்கிய தேவராஜக் குருக்கள் இரவீந்திரக் குருக்கள் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து அமரத்துவமடைந்தமை எமக்கும், எமது செயற்பாடுகளுக்கும் பேரிழப்பாகும். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொளவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ ஆலோசனை சபை
பிரதேச செயலகம், கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரபரப்பான ஆட்டத்தில் ஆஸி. 176 ஓட்டங்களால் வெற்றி



தென்னாபிரிக்க அணி வீரர் கலீஸ் (84 ஓட்டங்கள்) பந்தை தடுக்கும் காட்சிகள்...

டர்பன், மார்ச்11

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஆஸி. 176 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி டர்பனில் நடந்து வருகிறது. இதில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 352 ஓட்டங்கள் குவித்தது. தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 138 ஓட்டங்களுடன் சுருண்டது. அதிகபட்சமாக டுமினி 73 ஓட்டங்கள் எடுத்தார்.

இதைத் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணி 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 292 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பில் ஹிக்ஸ் 136 ஓட்டங்களுடனும், மைக்கல் கிளார்க் 14 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்டம் நடந்தது. பில் ஹிக்ஸ் 160 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நார்த் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். மதிய உணவு இடைவேளைக்கு முன்பு அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 331 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

பின்னர் 546 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய மெக்கன்ஸி 31 ஓட்டங்களிலும், அம்லா 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்தது. கலீஸ் 84 ஓட்டங்களுடனும், டிவில்லியர்ஸ் 68 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

நேற்று தொடர்ந்த ஆட்டத்தில் மேலும் 126 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தென்னாபிரிக்கா சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் ஆஸி 176 ஓட்டங்காளால் வெற்றி இலக்கை எட்டியது.

## சச்சினின் கருத்துக்கு கங்குலி ஆட்சேபம்

கொல்கத்தா, மார்ச் 11



இந்தியக் கிரிக்கெட் அணி குறித்து சச்சின் தெரிவித்த கருத்துக்கு முன்னாள் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதிய மூன்றாவது ஒரு நாள் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறைஸ்ட்சர்ச்சில் நடந்தது. இப்போட்டியில் சச்சின் 163 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். மற்றைய வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்த இந்திய அணி 392 ஓட்டங்கள் குவித்தது. இப்போட்டியின் வெற்றிக்குப் பின் சச்சின் கூறுகையில், ''இதுவரை நான் விளையாடியுள்ள இந்திய அணிகளில், தற்போதைய அணிதான் சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட அணி,'' எனக் குறிப்பிட்டார்.

இவரது கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் கங்குலி. இது குறித்து அவர் கூறியவை வருமாறு:-

''சச்சினின் கருத்து ஏற்றுக்கொள்ளமுடியாதது. தற்போதைய அணி தான் சிறந்தது எனக் கூறமுடியாது. சிறப்பாக செயல்பட்ட அணிகளுள், டோனி தலைமையிலான தற்போதைய அணியும் ஒன்று'' - என்றார்.

## 2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட்: சகல போட்டிகளும் இந்தியாவில்?

சிட்னி, மார்ச் 11

எதிர்வரும் 2011இல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் அனைத்தையும் இந்தியாவில் மட்டும் நடத்த வாய்ப்புள்ளது - என்கிறார் ஐ.சி.சி., தலைமை ஆலோசகர் இந்தர் ஜித் சிங் பிந்த்ரா.

உலக கோப்பை போட்டிகள் வரும் 2011 ஆம் ஆண்டு இந்தியா (22 போட்டிகள்), இலங்கை (9 போட்டிகள்), பாகிஸ்தான் (14 போட்டிகள்) மற்றும் பங்களாதேஷ் (6 போட்டிகள்) ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ளன.

லாகூர் தாக்குதலால் பாகிஸ்தானிலும், பயங்கரவாத பிரச்சினைகளால் இலங்கை, மற்றும் பங்களாதேஷிலும் உலகக் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறைவு. பாகிஸ்தானில் தொடர்ந்து சர்வதேச போட்டிகள் நடக்கவேண்டுமெனில் அமைச்சர்களுக்கு வழங்கும் பாது காப்பு, வீரர்களுக்கும் வழங்கப்படவேண்டும் - என்றார்.

## பெண்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி

# இந்தியாவை வீழ்த்தியது இங்கிலாந்து

9ஆவது பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்தை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்து ஆடுமாறு இந்திய அணியைப் பணித்தது. அதன்படி களமிறங்கிய இந்திய அணி 169 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எளிய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றி பெற்றது.




இந்திய அணி வீராங்கனை மைதிலி ராஜ் (59 ஓட்டம்) பந்தை தூக்கியடிப்பதை முதல் படத்திலும் விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியை இங்கிலாந்து வீராங்கனைகள் பகிர்ந்துகொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்...

# 4ஆவது ஒருநாள் போட்டி இன்று; நியூஸிலாந்து அணி அறிவிப்பு

ஹாமில்டன், மார்ச் 11

இந்தியாவுடனான 4ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடும் நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் நியூஸிலாந்தை எதிர்த்து விளையாடி வருகிறது. இதுவரை நடந்த 3 போட்டிகளின் முடிவில் 2:0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. முதலில் நடந்த ருவென்ரி 20 போட்டியில் அதிர்ச்சித் தோல்வியுற்ற இந்திய அணி ஒருநாள் தொடரில் அபாரமாக விளையாடி வெற்றி பெற்று வருகிறது.

இந்த நிலையில், 4ஆவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் இன்று நடக்கிறது. இப்போட்டிக்கான நியூஸிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் பட்லர், அணியிலிருந்து விலகினார். எனினும். அவர் ஆக்லாந்தில் நடக்க உள்ள கடைசி ஒருநாள் போட்டியில் (மார்ச் 14) விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த போட்டியில் 10 ஓவர்கள் பந்து வீசி 105 ஓட்டங்களை வாரி வழங்கிய மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் சவுத்தீ, அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார், அவரது இடத்தில் இவான் தொம்சன் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மனைவியின் (3ஆவது பிரசவம்) அருகில் இருப்பதற்காக, நியூஸிலாந்து அணித்தலைவர் விக்டோ கடந்த போட்டியில் விளையாடவில்லை. அவர் இன்றைய் போட்டியில் களம் இறங்குவதை உறுதி செய்துள்ளார். இன்றைய போட்டியில் இந்தியா வெற்றி பெற்றால் தொடரை வென்று விடும் என்பதால் இந்தத் தொடரிலும் ஓய்வு கேட்டிருந்த விக்டோ அவசரமாக அணியில் சேர்க் கப்ட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியா கியுள்ளன.

நியூஸிலாந்து அணி விவரம்:- விக்டோ (அணித்தலைவர்), எலியட், குப்டில், பிரெண்டன் மெக்கல்லம், மெக்லாஷன் (விக்கெட் காப்பாளர்), மில்ஸ், ஓபி ரைன், ஜேக்கப் ஓரம், பட்டேல், ரைடர், ரெய்லர், தொம்சன்.

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு உளவியல் கிகிச்சைக்கு ஏற்பாடு

கொழும்பு, மார்ச்11

பாகிஸ்தானில் தாக்குதலுக்கு இலக்கான இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு உளவியல் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமரவீரவின் தொடையில் பாய்ந்த குண்டும், தரங்க பரணவிதாரணவின் மார்பில் பாய்ந்த குண்டும் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மற்ற 5 வீரர்கள் சிறிய காயத்துடன் தப்பினர்.

தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலால் இலங்கை வீரர்கள் மனரீதியாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் அவர்கள் மீளவில்லை.

இதன் காரணமாக இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு மனோதத்துவ ஆலோசனை வழங்க விளையாட்டு அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இது தொடர்பாக விளையாட்டு அமைச்சின் வைத்தியசாலை நிர்வாகி கூறியவை வருமாறு:-

இலங்கை வீரர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மனரீதியிலான ஆலோசன்னை அவசியம். இதற்கு 4 சிறப்பு மனோதத்துவ நிபுணர்கள் வீரர்களுக்கு ஆலோசனை வழங்க உள்ளனர் - என்றார்.

# இந்தியாவின் துடுப்பாட்ட வீரர்களால் நியூஸிலாந்தின் பந்துவீச்சு தவிடுபொடி

ஹாமில்டன், மார்ச் 11

''எழுச்சி கண்டு வரும் இந்திய அணியின் துடுப்பாட்டக்காரர்களால், நியூஸிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு வகுக்கப்பட்ட திட்டங்கள் தவிடு பொடியாக்கப்பட்டன - என நியூஸிலாந்து பயிற்சியாளர் அன்டி மோல்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

நாங்கள் அனைத்து இந்தியத் துடுப்பாட்டக்காரர்களையும் குறைந்த ஓட்டங்களுக்குள் வீழ்த்துவதற்கு திட்டங்கள் வகுத்தோம். எமது பந்துவீச்சாளர்களும் சிறந்த முறையில் தான் பந்துவீசினார்கள். களத்தில் இந்திய வீரர்களின் எழுச்சியால் அவைகள் சிதைக்கப்படுகின்றன. இப்போது புதிய திட்டங்களை செயற்படுத்தியாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அப்போதுதான் அடுத்த தொடரிலாவது நாம் வெல்லமுடியும்.

இந்திய வீரர்கள் சிறிய மைதானத்தில், துடுப்பாட்டத்திற்கு சிறந்த மைதானத்தில் விளையாடுகிறார்கள். அவர்கள் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள். அவர்களுக்கு உரிய களம் சரியாக அமைந்து விட, தொடர்ந்து அசத்துகிறார்கள். எங்களிடம் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் குறைவு. அடுத்து வரவிருக்கும் போட்டிகளில் சரியாகச் செயல்படுவதற்கு முயற்சிப்போம்.

பந்துவீச்சில் நிறைய பயிற்சி செய்கிறோம். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் போதுமான அளவில் பந்து வீச முடியவில்லை. இதனைப் பயன்படுத்தும் டோனியின் வீரர்கள் பந்துவீச்சை ஒன்றுமில்லாமல் செய்துவிடுகின்றனர். வானவேடிக்கை நடத்தி ஓட்டங்கள் குவிக்கும் இந்திய வீரர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளோம். ஹாமில்டனில் இதற்கு முன்பு சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றுள்ளோம். மீண்டும் இங்கு வெல்வோம்.

நாங்கள் சரியாகச் செயல்படாத நிலையில் எங்களுக்கு மன்னிப்புக் கிடையாது. கடந்த போட்டியில் நாங்கள் தோற்று இருந்தாலும் சிறப்பாகச் செயல்பட்டு உள்ளோம். தற்போது தோல்வியடைவது போல தோன்றினாலும் விரைவில் வெற்றிபெறுவோம். மோசமாகவோ அல்லது சிறப்பாகவோ தோற்றாலும் தோல்வி தோல்விதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இந்தியா முன்வந்தால் 100 நாடுகள் வலியுறுத்தும்

## உண்ணாவிரதத்தில் வைத்து வைகோ

சென்னை, மார்ச் 11

இந்தியா போர் நிறுத்தத்தை வலியுறுத்தினால் உலகில் 100 நாடுகள் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும். ஆனால் இந்தியாவே போர் நிறுத்தத்தை வலியுறுத்தாதபோது மற்ற நாடுகள் எப்படி போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் என்று வைகோ கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தை முடித்துவைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

அலைபாயும் கடலுக்கு அப்பால் கண்ணீர் சிந்தும் ஈழமக்களுக்கு ஆதரவு அளிக்காத மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும், போர் நிறுத்தம் கோரியும் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா மேற்கொண்ட உண்ணாவிரதம் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தும்.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டத்தால் உலகெங்கும் உள்ள தமிழர்களின் கவனம் சென்னையின் பக்கம் திரும்பியுள்ளது. இப்போராட்டம் தமிழக மக்களிடம் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தும்.

ஈழத்தமிழ ரின் இருட்டிலே ஒரு வெளிச்சம் வருகிறது. எங்களுக்கு நம்பிக்கை வருகிறது. இந்தியா போர் நிறுத்தத்தை வலியுறுத்தினால் உலகில் 100 நாடுகள் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும். ஆனால் இந்தியாவே போர் நிறுத்தத்தை வலியுறுத்தாதபோது மற்ற நாடுகள் எப்படி போர் நிறுத்தத்தை வலியுறுத்தும்.

வாஜ்பாய் இந்தியப் பிரதமராக இருந்த போது அவரிடம் இலங்கை அரசு பணம் கொடுத்தால் ஆயுத உதவி அளிப்பீர்களா என செய்தியாளர்கள் கேட்டதற்கு, பணம் கொடுத்தாலும் ஆயுதம் கொடுக்க மாட்டேன் என்றார். அதன்படியே நடந்து கொண்டார்.



ஆனால் இந்த காங்கிரஸ் அரசு ஆயுத உதவி அளிக்கிறது. 5 ராடர்கள் கொடுத்திருக்கிறது. போரை நிறுத்துங்கள் என்று உலக நாடுகள் எல்லாம் சொல்கின்றபோது இந்திய அரசு ஏன் சொல்லவில்லை. இந்திய அரசுதானே ஈழத்தமிழர்கள் மீது போரை நடத்துகிறது. பின்பு எப்படி போரை நிறுத்தச்சொல்ல முடியும்.

உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் இலங்கையில் மருத்துவமனைகள் கூட குண்டு வீசி அழிக்கப்படுகின்றன.

அந்தச் சூழ்நிலையில்தான் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க எம்.ஜி.ஆர். வழியில் ஜெயலலிதா போராட்டக் களத்தில் குதித்துள்ளார். அவரது உண்ணாவிரதப் போராட்டம் இலங்கையிலும், இந்தியாவிலும் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தும் - என்றார்.

**இந்தியக் கம்னிஸ்ட் மாநிலச் செயலர் தா. பாண்டியன் பேசியவை வருமாறு -**

இலங்கையில் நடந்துவரும் இனப்படுகொலையை இந்திய அரசு தடுக்கவும் இல்லை. வாய்திறக்கவும் இல்லை. மாநில அரசு நடத்திய நாடகங்களுக்கு முடிவே கிடைக்கவில்லை. இதை இந்த உலகத்துக்கே தெரிவிப்பதற்காகத்தான் முன்னாள் முதல்வர் இங்கே வந்திருக்கிறார்.

எங்கள் போராட்டத்தில் பொதுச்சொத்துக்கு ஒரு கீறல் கூட வராது. பொதுச்சொத்து பொது மக்களுக்கு உரியது என்ற பொறுப்பை உணர்ந்தவர்கள் நாங்கள்.

உலகம் உழுவதும் உள்ள அத்தனை தமிழர்களுக்கும் இந்தப் போராட்டம் ஊக்கத்தை தந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மருந்து கிடைக்கிறதோ இல்லையோ, அவர்களுக்கு இது ஆறுதலாக இருக்கும். அங்கு அமைதி திரும்பும் வரை நாம் தர்மப் போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்றார்.



இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மருந்து, மருத்துவ உபகரணங்களை இந்தியா நேற்றுமுன்தினம் அனுப்பியது. டில்லியில் உள்ள பாலம் விமான நிலையத்தில் மருந்துகள், மருத்துவக் கருவிகள் கொண்ட பெட்டிகளை விமானத்தில் ஏற்றுகின்றனர்.

# இலங்கைத் தமிழருக்கு நிவாரணப் பொருள்கள் காங்கிரஸ் சார்பில் நாளை திரட்ட ஏற்பாடு

## ஆந்திரா, புதுச்சேரி, கேரளாவிலும் சேகரிக்கப்படும் என்கிறார் தங்கபாலு

சென்னை, மார்ச். 11

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களுக்கு உதவுவதற்காக காங்கிரஸ் சார்பில் நாளை தமிழ்நாடு முழுவதும் நிவாரணப் பொருள்கள் திரட்டப்படும். இதேபோல் ஆந்திரா, புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களிலும் நிவாரண பொருள்கள் திரட்டப்படும் - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.


சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களுக்கு உதவுவதற்காக காங்கிரஸ் சார்பில் வரும் நாளை தமிழ்நாடு முழுவதும் நிவாரணப் பொருள்கள் திரட்டப்படும்.

இதேபோல் ஆந்திரா, புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களிலும் நிவாரண பொருள்கள் திரட்டப்படும். சேகரிக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா. சபை மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

இலங்கைத் தமிழர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்யமுடியுமோ அவை அணைத்தையும் காங்கிரஸ் தொடர்ந்து செய்து வருகிறது. நிவாரண உதவிகளாக புதிய வேட்டி, சேலை, பால்மா, அரிசி, பருப்பு ஆகியவை திரட்டப்படும்.

இலங்கைத் தமிழர்கள் வாழ்வுரிமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது. இதை நாடு அறியும். குறை சொல்வோருக்கு ஒரு வேண்டுகோள், மத்திய மாநில அரசுகள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கேள்விகளுக்கு அவருடைய முந்தைய அறிக்கைகளே பதிலாக அமையும்.



இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட முடியாது. அது அந்த நாட்டின் உள் விவகாரம் என்று ஜெயலலிதா ஏற்கனவே அறிக்கை விடுத்தார். இப்போது அவர் பேசுவது, முரண்பாடாக உள்ளது. இந்திய அரசு இலங்கைக்கு எந்தவிதமான இராணுவ உதவிகளையும் செய்யவில்லை. தா.பாண்டியன், வரதராஜன், வைகோ ஆகியோருக்கு எனது கேள்வி, இலங்கைக்கு சீனாவும், பாகிஸ்தானும், இஸ்ரேலும் ஆயுதம் வழங்குவதை பலமுறை நான் சுட்டிக் காட்டியும் கண்டிக்காதமை ஏன்?

இலங்கையில் இந்தியப் படையினர் முகாமிட்டு போரில் ஈடுபடுகின்றனர் என வைகோ சொல்வது அப்பட்டமான பொய். ராஜீவ் கொலைக்குப் பிறகும் 6 மாதங்கள் விடுதலைப் புலிகளுக்கு உணவும், மருந்தும் கொடுத்து காப்பாற்றினார் என அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் எப்படி உண்மையான இந்தியனாக இருக்க முடியும் - என்றார்.

# ஈழத் தமிழர்களுக்கு அ.தி.மு.க. சார்பில் ரூபா ஒரு கோடி; ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, மார்ச் 11



இலங்கைத் தமிழர் நலனுக்காக, அ.தி.மு.க. சார்பில் ஒரு கோடி ரூபா வழங்கப்படும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் சென்னையில் நடந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட ஜெயலலிதா, மேடையில் வைக்கப்பட்டிருந்த இலங்கை தமிழர் உதவி நிதிக்கான உண்டியலில் ரூபா 5 இலட்சத்தை போட்டு நிதி திரட்டுவதைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சி முடிவில் பேசியபோதே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்காக நிதி திரட்டுவதற்கு வைக்கப்பட்ட உண்டியலில் காலையில் தனிப்பட்ட முறையில் எனது சொந்த நிதியில் இருந்து ரூ. 5 லட்சம் வழங்கினேன். தற்போது அ.தி.மு.க.வின் பொது செயலாளர் என்ற முறையில், கட்சி சார்பில் இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு கோடி ரூபா வழங்குகிறேன்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்து அ.தி.மு.க. சார்பில் இலங்கைத் தமிழர்களுக்காகத் திரட்டப்பட்ட நிதி, எங்களுக்கு வந்து சேர்ந்த பின்னர், ஒட்டுமொத்தமாக அதைக் கணக்கு பார்த்து, அந்த ஒட்டுமொத்த தொகை, செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும்.

இலங்கை தமிழர்களுக்காக நாம் நடத்தும் இந்த அறப்போராட்டம் மூலம் அவர்களுக்கு முழுமையாக நமது ஆதரவை தெரிவிக்கும் வகையிலும், அவர்களைக் காப்பாற்றுவதற்காக எந்த நடவடிக்கையையும் எடுக்காத மத்திய, மாநில அரசுகளை கண்டிக்கும் வகையிலும் இந்த உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி - என்றார்.

# ஈழத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து மாசி மகத்தை புறக்கணித்த 20 கிராம மக்கள்

கடலூர், 11

ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவதற்கு கண்டனம் தெரிவித்து கடலூர் அருகேயுள்ள 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள், 100 ஆண்டுகள் காலமாக கொண்டாடப்பட்டு வரும் மாசி மகத்திருவிழாவைப் புறக்கணித்தனர் - எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடலூர் அருகேயுள்ள பெரியக்குப்பம் கடற்கரையில் மாசி மகத் திருவிழா மிகச்சிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும்.

மாசி மகத்தை முன்னிட்டு சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள கோவில்களில் 10 நாட்கள் விழா நடக்கும். நாள்தோறும் அன்னதானம், கலை நிகழ்ச்சிகள், தெருக்கூத்து என கிராமமே களைகட்டிக் காணப்படும்.

இந்நிலையில் 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலங்கையில் தமிழர்கள் நாள்தோறும் படுகொலை செய்யப்படுவதும், சொந்த நாட்டிலேயே அவர்கள் அகதிகளாக்கப்பட்டு பட்டினிச் சாவுக்குள்ளாகிவருவதும் நடந்து வருகிறது.

இந்நிலையில் நம் கடல் பகுதியில் மாசி மகத்திருவிழாவைக் கொண்டாடுவதா? எனவே, இந்த ஆண்டு மாசி மகத்திருவிழாவை புறக்கணிக்க வேண்டும் என்பது குறித்து கிராமத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் கடந்த இருவாரங்களுக்கு முன்னால் ஆலப்பாக்கம் கிராமத்தில் நடந்தது.

இக் கூட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் குறிஞ்சிப்பாடி ஒன்றியச்செயலாளர் ஜெயக்குமார் தலைமை தாங்கினார். இதில் 20க்கும் மேற்பட்ட கிராமத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் போரை நிறுத்த வலியுறுத்தியும் மாசி மகத்திருவிழாவை புறக்கணிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி நேற்று ஆலப்பாக்கம், கீழ்புவாணிக்குப்பம், மேல்புவாணிக்குப்பம், அம்பேத்கர் நகர், பெத்தாங்குப்பம், குறுவன்மேடு, முல்லைநகர், பள்ளீநீர் ஓடை, கரைமேடு, வெள்ளச்சிக்குப்பம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் நேற்று மாசி மகத்தைப் புறக்கணித்தனர்.

சுவாமி சிலைகள் தீர்த்தவாரிக்கு செல்லாமல் அனைத்து கிராம கோவில்களும் பூட்டப்பட்டன. ஆலப்பாக்கம் கிராமத்தில் அனைத்து வீடுகளிலும் நேற்று கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

# உச்சிப்புளி கடற்படைத் தளத்துக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர் கைது

## புலிகளுடன் தொடர்புடையவரா எனப் பொலிஸார் விசாரணை

இராமநாதபுரம், மார்ச் 11

உச்சிப்புளி கடற்படைத் தளத்துக்குள் அத்துமீறி நுழைந்த வாலிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவரா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான விமானத் தளம் உள்ளது.

நேற்றுமுன்தினம் கடற்படைத் தளத்திற்குள் சந்தேகப்படும் வகையில் இளைஞர் ஒருவர் சுற்றித்திரிந்தார். அதைக் கண்டு திடுக்கிட்ட கடற்படை அதிகாரிகள் அவரைப் பிடித்து கடற்படை அலுவலகத்திற்குக் கொண்டு சென்று விசாரித்தனர். விசாரணையில், அவர் தஞ்சாவூரைச் சேர்ந்த ராஜேந்திரன் (வயது - 35) என்பது தெரியவந்தது.

தொடர்ந்து அதிகாரிகள் அந்த இளைஞரிடம் விசாரணை செய்தபோது, அவர் மனநோயாளி போல் பதிலளித்தார். இதைத்தொடர்ந்து அவர் மீது சந்தேகமடைந்த கடற்படை அதிகாரிகள் உச்சிப்புளி பொலிஸ் நிலையத்தில் அவரை ஒப்படைத்தனர்.

அங்கு இளைஞர் மீது, கடற்படைத் தளத்திற்குள் அத்துமீறி நுழைந்தார் எனப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, அவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தினர். அங்கும் அவர் மனநோயாளி போன்று பேசியதால் பொலிஸார் குழப்பமடைந்தனர்.

அந்த இளைஞர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவராக இருக்கலாமா? உண்மையிலேயே மனநோயாளியா? அல்லது உண்மையை மறைக்க நாடகமாடுகிறாரா என்று பொலிஸார் சந்தேகித்தனர். இதனைதொடர்ந்து அவர் இராமநாதபுரம் அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

# பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கும்வரை எமது பணிப் புறக்கணிப்புப் போர் ஓயாது!

## சட்டத்தரணிகள் தெரிவிப்பு

சென்னை, மார்ச்.11

உயர்நீதிமன்றில் தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் வரை போராட்டம் நடத்தப்படும் - என்று சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.சி.பால்கனகராஜ் அறிவித்தார்.

இதுகுறித்து சென்னை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.சி.பால்கனகராஜ் கூறியவை வருமாறு -

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எச்.எல். கோகலே கூறும்போது, எங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீதிமன்றுக்கு திரும்புவது பற்றி உங்களது சங்க உறுப்பினர்களிடம் பேசுங்கள் என்று கேட்டுக் கொண்டார். உயர்நீதிமன்றச் சம்பவத்தில் 500 பேர் காயமடைந்தும், நிம்மதி இழந்தும் போயிருக்கிறார்கள். இதுவரை அரசு மற்றும் நீதித்துறை மூலம் நியாயம் கிடைக்கவில்லை. தவறு செய்த பொலிஸ் [illegible] எடுத்த பிறகுதான் [illegible] அதுவரை நமது போராட்டம் ஓயாது - என்றார்.

# ராகுல் காந்தி பிரதமராக வேண்டும்; காங்கிராஸாரின் விரும்பம் இதுவே

## அக்கட்சிப் பத்திரிகை கருத்து

டில்லி, மார்ச் 11



ராகுல் காந்தி விரைவில் பிரதமராக வேண்டும் என்பதே காங்கிரஸாரின் விருப்பம் - என்று காங்கிரஸின் அதிகாரபூர்வ பத்திரிகையில் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சந்தேஷி'ல் எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பொதுச் செயலாளர் என்ற முறையில் கடினமான உழைப்பின் மூலம் இளைஞர்கள் மத்தியில் [illegible] நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளார். இதன் காரணமாகவே நாடு முழுவதுமுள்ள காங்கிரஸார் அவரை விரைவில் இந்தியாவின் பிரதமராகக் காண விரும்புகிறார்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு பலவீனமாக இருந்த காங்கிரஸ், சோனியாவின் இடைவிடாத முயற்சியால்தான் இன்று நல்ல நிலையை அடைந்துள்ளது - என்றுள்ளது.

இதே பத்திரிகையில் காங்கிரஸாருக்கு சோனியா எழுதியுள்ள கடிதத்தில்-

கட்சிக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடு ஒவ்வொரு முறையும் மக்கள் நமக்கு தரவிருந்த வெற்றியைத் தடுத்திருக்கிறது. எனவே காங்கிரஸார் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டியது அவசியம். நாம் கடினமாக உழைத்தால் மக்கள் நமக்கு சாதகமாக மீண்டும் நிச்சயமாக தீர்ப்பளிப்பார்கள் - என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் குழப்பத்தை தீர்க்கக்கோரி ஜனாதிபதிக்கு பாக். இராணுவத் தளபதி காலக்கெடு விதிப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 11

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தை எதிர்வரும் 16 ஆம் திகதிக்குள் சரி செய்யுமாறு ஜனாதிபதி சர்தாரிக்கு இராணுவத் தளபதி பர்வேஸ் கியானி 'கெடு' விதித்துள்ளார். எனவே, அங்கு இராணுவ புரட்சி ஏற்படும் நிலை உருவாகி வருகிறது.

பாகிஸ்தானில் நடந்த தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் ஆதரவு கட்சி தோல்வியடைந்தது. எவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து கூட்டணி ஆட்சி நடத்தி வருகின்றன. பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளில் மக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்களே இருக்கின்றனர்.

ஜனாதிபதியாக சர்தாரியும், பிரதமராக யூசுப் ரசா கிலானியும் உள்ளனர். ஆட்சி அமைத்த உடனேயே, முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பால் நியமிக்கப்பட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நீக்கிவிட்டு புதிய நீதிபதிகளை நியமிக்குமாறு நவாஸ் ஷெரீப் கூறினார். ஆனால், அந்தக் கோரிக்கையை சர்தாரி ஏற்றுக்கொள்ளவில்லை.

சமீபத்தில், அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் இராணுவத் தளபதி பர்வேஷ் கியானியிடம் சில முக்கிய உத்தரவுகளை அமெரிக்கா பிறப்பித்தது. அதன் பின்னர் பாகிஸ்தான் திரும்பிய கியானி இராணுவ உயர் அதிகாரிகளுடன் நடந்த 6 ஆம் திகதி அன்று ஆலோசனை நடத்தினார். அப்போது பாகிஸ்தானில் நிலவும் குழப்பம் குறித்து அமெரிக்கா தெரிவித்த கவலை, பஞ்சாப் மாகாணம் கலைக்கப்பட்டமை ஆகிய விடயங்கள் குறித்து விவாதித்தார்.

இந்தச் சூழ்நிலையில், பாகிஸ்தானில் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுமாறு ஜனாதிபதி சர்தாரிக்கு தளபதி கியானி நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளிப்படையாக அறிவுறுத்தினார். எதிர்வரும் 16 ஆம் திகதி அன்று நவாஸ் ஷெரீப் ஆதரவாளர்கள் நடத்தும் போராட்டத்தை தடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார். இதனால் நவாஸ் ஷெரீப்புடன் சமாதானமாக செல்ல வேண்டிய நிலைமை சர்தாரிக்கு ஏற்பட்டுள்ளது.

அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பாகிஸ்தானில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சர்தாரி தவறினால் ஆட்சியை இராணுவம் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகும். எந்த நேரத்திலும் இராணுவப் புரட்சி ஏற்படலாம் என்று தெரிகிறது. அதே சமயம் இராணுவத்துடன் பிரதமர் யூசுப் ரசா கிலானி நெருக்கம் காட்டி வருகிறார். இராணுவத் தளபதி பர்வேஸ் கியானி, பாகிஸ்தான் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐயின் முன்னாள் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## இரண்டு கப்பல்கள் நேருக்குநேர் மோதல்

டோக்கியோ, மார்ச் 11

தென்கொரிய சரக்குக் கப்பலும் பனாமா சரக்குக் கப்பலும் மத்திய ஜப்பானின் தீவுக்கப்பால் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாயின.

இவ்விபத்தையடுத்து, 16 சிப்பந்திகளுடன் விபத்தில் சிக்கிய தென்கொரிய சரக்குக் கப்பல் காணாமற் போய்விட்டது. பனாமா கப்பல் பலத்த சேதத்திற்குள்ளானது. எனினும் உயிரிழப்பு நேரவில்லை.

காணாமற்போன தென்கொரிய கப்பலை மீட்கும் பணியில், ஜப்பானிய கரைப்பிராந்திய காவற்படை, ஆறு ரோந்துக் கப்பல்களை ஈடுபடுத்தியுள்ளது.

இஷு ஒஷிமா என்னும் இத் தீவுக் கப்பல் காணாமற்போன கப்பலைக் கண்டுபிடிக்கும் பணியில், ஜப்பானிய விமானப் படை விமானமொன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த இடம் ஜப்பானின் தலைநகரான டோக்கியோவிற்கு தெற்கே, ஏறத்தாழ 120 கிலோ மீற்றர் (74 மைல்) தொலைவில் அமைந்துள்ளது.

# திபெத்துக்கு சுயாதீன உரிமை வழங்குக; தொடர்ந்து வலியுறுத்துகிறார் தலாய்லாமா

புதுடில்லி, மார்ச் 11

"திபெத்துக்குச் சட்டபூர்வமாக காத்திரமான சுயாதீன உரிமை வழங்கப்பட வேண்டும்" என இந்தியாவிலுள்ள தர்மசாலாவில் அஞ்ஞாதவாசமிருந்து வரும் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

திபெத்தில் சீன ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு, தோல்வியில் முடிவடைந்த புரட்சியின் 50 ஆவது வருடநிறைவையொட்டி, தாம் விடுத்துள்ள செய்தியில், தலாய் லாமா இதனை வலியுறுத்தியுள்ளார்.


1959 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி திபெத்தின் தலைநகரான லாசாவில், சீனத் துருப்புகளுக்கு எதிராகப் புரட்சி குமுறி வெடித்தது. எனினும், இது சீனத் துருப்புகளால் சாதுரியமாக முறியடிக்கப்பட்டு விட்டது.

புரட்சிக்கு ஒரு வாரத்துக்குப், பின்னர், ஆன்மிகத் தலைவர் தலாய்லாமா விமான மூலம் இந்தியா வந்தடைந்து புகலிடம் பெற்றார். அது முதல் திபெத்துக்கான சுயாதீன உரிமைக்காக, உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் ஈடுபட்டு வருகிறார்.

"சீனாவிடமிருந்து சுதந்திரம் என்பது எமது கோரிக்கை அல்ல. சுயாதீன உரிமையே எமது கோரிக்கையாகும். இதை பூதாகாரமான ஒரு விவகாரமாக உருவாக்கி, திபெத்தில் பதற்றத்தையும், அச்சத்தையும் உருவாக்க சீனா முனைகிறது" என்றும் ஆன்மீகத் தலைவர் தமது செய்தியில் குற்றஞ் சாட்டியுள்ளார்.


"புரட்சியின்போது, சீனத் துருப்புகளால் ஆயிரக்கணக்கான திபெத்தியர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளார்கள். ஆயிரக்கணக்கான வழிப்பாட்டுத்தலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பெருந் தொகையானோர் கைது செய்யப்பட்டு, சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"திபெத்தியர்களாகிய நாங்கள் சட்டபூர்வமானதும், அர்த்தமுள்ளதுமான சுயாதிபத்திய உரிமையையே கோருகிறோம்; எதிர்பார்க்கிறோம். அப்படியானால், 'சீன மக்கள் குடியரசு' என்ற கட்டுக்கோப்புக்குள் எங்களாலும் தலை நிமிர்ந்து வாழ முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கண்காணிப்புக் கப்பல் சுற்றிவளைப்பு சர்வதேச சட்டத்திற்கு முரணானது

## சீனாவை கண்டிக்கிறது அமெரிக்கா




வாஷிங்ரன், மார்ச் 11

தென் சீனக் கடலில் அமெரிக்கக் கடற்படைக் கண்காணிப்புக் கப்பலொன்று ஐந்து சீனக் கப்பல்களால் சுற்றி வளைக்கப்பட்டமை சர்வதேச சட்டத்துக்கு முரண்பாடான செயல் என பென்ரகன் தெரிவித்துள்ளது.

"சீன கப்பல்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சமீப காலத்தில் அதிகரித்துள்ளன. ஐந்து சீனக் கப்பல்கள் ஞாயிற்றுக் கிழமை அமெரிக்கக் கப்பலை சுற்றிவளைத்து, வழி மறித்துள்ளன" என பென்ரகன் பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

"கடல்களை ஏனையோரும் பயன்படுத்தலாம். சர்வதேச சட்டம் இதற்கு அனுமதி அளிக்கிறது. அதேவேளை, இக் கப்பல் மறிப்பு ஆக்கிரமிப்பு சர்வதேச கடற்பிராந்தியத்திலேயே இடம்பெற்றுள்ளது" என அமெரிக்கா அதன் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

"அமெரிக்கக் கடற்படையின் கண்காணிப்புக் கப்பல், சர்வதேச கடற்பரப்பில் வழமையான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், சுற்றி வளைக்கபட்டுள்ளது. சீனாவின் தென் ஹய்னான் தீவிலிருந்து 120 கிலோ மீற்றர் (75 மைல்) தொலைவில் அமைந்துள்ள சர்வதேச கடற்பரப்பிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இந்தியா உள்ளிட்ட வளர்முக நாடுகளை பொருளாதாரச் சரிவு பெரிதும் பாதிக்கும்

## உலக வங்கி எச்சரிக்கை

நியூயோர்க், மார்ச் 11

சர்வதேச பொருளாதாரச் சரிவு காரணமாக இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளில் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் என உலக வங்கி எச்சரித்துள்ளது. இதன் தாக்கம் நீண்டகாலத்துக்கு நீடிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தற்போதுதான் சர்வதேச பொருளாதாரம் சரிவைச் சந்தித்துள்ளது. இதனால் சர்வதேச பொருளாதார வளர்ச்சி குறையும். இதனால் 27,000 இலட்சம் கோடி டொலர் முதல் 70,000 இலட்சம் கோடி டொலர் வரை பணப்புழக்கம் குறையும்.

இதனால் மொத்தமுள்ள 116 வளரும் நாடுகளில் பாதிப்பு ஏற்படும். ஏற்கனவே 94 நாடுகளில் பொருளாதார தேக்க நிலையின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. இதனால் பல தொழில்துறைகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

கம்போடியாவில் ஜவுளி ஏற்றுமதித் துறையில் கடந்த ஆறு மாதங்களில் ஏறக்குறைய 30 ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர். இந்தியாவில் 2008 ஆம் ஆண்டில் மூன்று மாதங்களில் மட்டும் 5 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஜெம் அன்ட் ஜுவல்லரி தொழில்துறையைச் சேர்ந்தவர்கள்.

இப்பிரச்சினைக்கு அரசு, பல்வேறு மையங்கள் மற்றும் தனியார் துறையினர் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமே தீர்வு காணமுடியும். புதிதாக வேலை வாய்ப்பை உருவாக்குவது, சமூக பாதுகாப்பு திட்டங்களை அமுல்படுத்துவது ஆகியவற்றின் மூலமே வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை அதிகமாகாமல் தடுக்க முடியும்.

வளரும் நாடுகளில் உள்ள மக்களை பாதிக்கும் தற்போதைய பிரச்சினைக்கு தீர்வுகாண ஜி - 20 மாநாட்டில் ஒருமித்த கருத்து எட்டப்படும் என்று உலக வங்கித் தலைவர் ராபர்ட் பி ஜோயலிக் தெரிவித்தார்.

கடந்த 80 ஆண்டுகளில் ஏற்படாத அளவுக்கு சர்வதேச பொருளாதார வளர்ச்சி 15 சதவீத அளவுக்கு வீழ்ச்சியடையும்.

நிதி நெருக்கடியைச் சமாளிக்க வளரும் நாடுகள் சர்வதேச அளவில் கடன் பெற முயன்றாலும், அதற்கு அதிக வட்டி செலுத்த வேண்டிய சூழல் உருவாகும். முதலீடுகள் குறைவதால் பொருளாதார வளர்ச்சி மேலும் சரிவைச் சந்திக்கும்.

ஏற்கனவே மிகவும் மோசமான பொருளாதார நிலையில் உள்ள ஆபிரிக்க நாடுகளில் வாழும் மக்கள் இன்னும் மோசமான நிலையைச் சந்திக்க நேரிடும் என்று வங்கியின் நிர்வாக இயக்குநர் நகோஸி ஒகோன்ஜோ - இவேலா தெரிவித்தார்.

ஏற்கனவே வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து பெறப்படும் நிதியின் மூலம் பல்வேறு நிதித் திட்டங்களைச் செயல்படுத்தும் மூன்றாம் உலக நாடுகள் இந்த சரிவு காரணமாக மிகக் கடுமையான சிக்கலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பெரும்பாலான நாடுகள் நடப்பு ஆண்டில் தாங்கள் பிற வளரும் நாடுகளுக்கு அளிக்கும் உதவித் தொகையை பெருமளவு குறைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் நிதியை எதிர்பார்க்கும் வளரும் நாடுகளுக்கு மேலும் சிக்கல் உருவாகும் என இவேலா சுட்டிக் காட்டியுள்ளார்.

வளரும் நாடுகள் தங்கள் நாடுகளில் பொருளாதாரத்தை ஊக்குவிக்க பல்வேறு சலுகைகளை தொடர்ந்து சில காலத்துக்கு மேற்கொள்ள வேண்டியிருக்கும். வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலைமை சீரடையும் வரை இத்தகைய சலுகைகளை அளிக்க வேண்டியிருக்கும் என்று உலக வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் ஜஸ்டின் யிஃபு தெரிவித்துள்ளார்.

# மேற்கத்திய ஜனநாயக முறைகளை நிராகரிக்கின்றது சீன நாட்டு அரசு

பீஜிங், மார்ச்11

மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்படும் ஜனநாயக முறை தங்கள் நாட்டுக்குத் தேவையில்லை என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவில் பெயரளவில் செயற்படும் நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சீனாவில் பின்பற்றப்படும் ஒரு கட்சி கம்யூனிஸ்ட் ஆட்சி முறையை மூத்த அரசியல் வல்லுநர் வு பான்கு ஆதரித்துப் பேசினார்.

"மேற்கத்திய நாடுகளில் பின்பற்றப்படும் பல கட்சி ஆட்சி முறை சீனாவுக்குத் தேவையில்லை. அம்முறை இங்கு நிச்சயம் அமுல்படுத்தப்பட மாட்டாது. அரசு, நீதித்துறை, நடாளுமன்ற மேலவை, கீழவை என அதிகாரத்தைப் பிரித்து வழங்கும் எண்ணம் சீன அரசுக்கு இல்லை" என்றும் அவர் கூறினார்.

"சீனா இப்போது சரியான பாதையில் முன்னேறி வருகிறது. எனவே, அரசியல் முறையில் எந்த மாற்றமும் கொண்டு வரப்படத் தேவையில்லை" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சீனாவில் பல கட்சி ஜனநாயக ஆட்சி முறை கொண்டு வரப்பட வேண்டும் என உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வரும் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் பொருட்டு வு பாங்கு இவ்வாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களை வெளியேற்றுவது குறித்து ஹிலாரியும் மேனனும் பேசவில்லை எனத் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுக்கும் இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனிற்கும் இடையில் திங்கட்கிழமை வாஷிங்டனில் இடம்பெற்ற சந்திப்பின் போது இலங்கை குறித்து முக்கியமாக ஆராயப்பட்டபோதிலும் வன்னி மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம் பற்றி எவ்வித பேச்சும் இடம்பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை விவகாரம், மும்பை குண்டு வெடிப்பு மற்றும் ஆப்கானிஸ்தான் பிரச்சினைகள் உட்படப் பல விடயங்கள் குறித்து இங்கு முக்கியமாக ஆராயப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிற்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள சிவ்சங்கர் மேனன் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுடன் திங்கட்கிழமை பேச்சுகளை மேற்கொண்டார். அரைமணித்தியாலத்திற்கு மேல் இடம்பெற்ற இப் பேச்சுகளின் போது ஆராயப்பட்ட முக்கிய விடயங்களில் இலங்கை விவகாரமும் இடம்பெற்றிருந்ததாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிளின்ரனுக்கும் மேனனுக்கும் இடையிலான இந்த சந்திப்பின்போது இலங்கையில் மோதலில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் திட்டம் குறித்து ஆராயப்படவில்லையென்றும், அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் ஆயுத மோதலில் எது நடைபெற்றாலும் இறுதியில் அரசியல் தீர்வொன்று காணப்படுவதை உறுதி செய்வதற்கான வழி வகைகளில் இந்தியாவும் அமெரிக்காவும் எவ்வாறு இணைந்து பங்காற்றலாம் என ஆராயப்பட்டது என இச்சந்திப்பின் பின்னர் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து ஹிலாரி கிளின்ரன் மிகவும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார். இந்த விடயத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து ஆற்றக்கூடிய பங்களிப்புகள் உள்ளன என அவர் கருதுகின்றார். இதன் காரணமாகவே பிராந்தியவிடயங்களில்இலங்கை



முக்கியமாக இடம்பெற்றது என்றும் அதிகாரிகள் தெரிவித் தனர்.

கிளின்ரன் தெரிவித்த கரிசனைகளுக்கு மேனன் சாதகமான உணர்வுகளை வெளிப்படுத்தினார் எனவும், எனினும் இந்த விடயத்திற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து முடிவு எதுவும் எட்டப்படவில்லை எனவும் தெரிகிறது. (அ-சி)

## மழையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, புதுமாத்தளன் வைத்திய சாலைக்கு காயமடைந்த நிலையில் நேற்று 277 பேர் கொண்டுவரப்பட்டனர். அதில் 66 சிறுவர்களும் அடங்குவர். காயமடைந்தவர்களில் 45 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி. வரதராஜா நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

277 பேர் செவ்வாயன்று காயங்களுடன் புதுமாத்தளன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். அத்துடன் ஷெல் வீச்சில் உயிரிழந்த 4 பேரின் சடலங்களும் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன.

கடந்த இரு தினங்களாகப் பெய்த கடும் மழை காரணமாக பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அவர்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள கூடாரங்கள், முகாம்களுக்குள் மழை வெள்ளம் புகுந்திருப்பதால் அவர்கள் எங்கு செல்வது எனத் திக்குமுக்காடி நிற்கின்றனர்.

அத்துடன், மழையால் தொற்றுநோய்களும் பரவுகின்றன. அவற்றைத் தடுப்பதற்குரிய மருந்துகளும் இல்லை. ஷெல் வீச்சால் மக்கள் அவதிப்படும் நிலையில் மழையாலும் அவர்களின் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

முல்லைத்தீவில் இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வரும் மக்கள் அப்பகுதியில் கடந்த இரு நாள்களாக பெய்து வரும் பெரும் மழையினால் பெரும் துன்பங்களுக்கு ஆளாகி உள்ளனர்.

மக்கள் இடம்பெயர்ந்து வசிக்கும் பகுதிகள் பெரும்பாலானவை வயல் நிலங்கள் என்பதால் அவர்களின் வசிப்பிடங்களில் 1/2அடி தொடக்கம் ஒரு அடி வரை வெள்ளம் நிற்கிறது. அம்மக்கள் தங்குவதற்கு எந்தவொரு கட்டடமும் இல்லாததனால் வெள்ளத்தினுள்ளேயே பெரும் அவதிக்குள் நாள்களைப் போக்குகின்றார்கள்.

வெயிலுக்குத் தாக்குப்பிடிக்கவே மக்கள் தறப்பாள்களால் கொட்டில்கள் அமைத்து வாழ்ந்தனர். இப் பெருமழை யாருமே எதிர்பார்க்காத நேரத்தில் வந்ததால் சமைப்பதற்கு விறகு கூட கிடைக்காத நிலையில் பலர் மூன்று நேரமும் பட்டினி கிடந்தனர் என்றும் அறியப்ப டுகிறது - என்று டாக்டர் வரதராஜா கூறினார். (அ-சி-6)

## புலிகளின் ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

அன்றையதினம் அப்பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் படைத்தரப்புக்கு இழப்புகள் ஏற்பட்டன என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எத்தனை படையினர் இதில் உயிரிழந்தனர் என்ற விவரத்தை ஊடக மத்திய நிலையம் வெளியிடவில்லை. (அ-சி)

## வன்னி மக்களுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர்களுக்கு போதியளவு உதவிகளை வழங்க சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டியது இன்றியமையாததெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் இடம்பெற்று வரும் யுத்த முன்நகர்வுகளின் காரணமாக சிவிலியன்கள் எதிர்நோக்கிவரும் மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்ட திட்டங்களை மதித்து செயற்பட வேண்டியது மோதல்களில் ஈடுபட்டுவரும் சகல தரப்பினரதும் தார்மீக பொறுப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் சிவிலியன்களை சுதந்திரமான இடம் நகர அனுமதிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமாதானப் பேச்சுகள் நடத்தப்படவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தவில்லை என பிளேக் தெரிவித்துள்ளார்.

எனினும், மூன்று தசாப்த காலமாக நீடித்துவரும் இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டத்தின் மூலமே நிரந்தர சமாதானத்தை எட்ட முடியும். தமிழர் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கப்படக் கூடிய ஓர் அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றே தற்போதைய தேவையாகும் - என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரவாத அமைப்பு. மத நிகழ்வுகளைக்கூட அது மதிப்பதில்லை என்பதை இந்த தாக்குதல் புலப்படுத்துகின்றது. மேலும் இது இன, மத பகைமையை உருவாக்குவதற்கான முயற்சி - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோல்வியின் விளிம்பில் நிற்கின்ற விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை இது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களை பொறுமை காக்குமாறும் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அரசு கோரியுள்ளது. (அ-சி)

## கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்தப்படும் "கிறின் ஓஷன்" என்ற கப்பல் முல்லைத்தீவு, புதுமாத்தளனில் இருந்து காயமடைந்தவர்களை திருமலைக்கு அழைத்துச் செல்லும் பணியில் ஈடுபடுத்தப்படுவதால் பயணிகள் சேவையை சில நாள்களுக்கு நிறுத்த நேர்ந்துள்ளதாகவும் சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. பயணிகள் கப்பல்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படும் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## மாத்தறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடப்பிட்டிய பள்ளிவாசலுக்கு அருகில் இடம்பெற்ற மீலாத்தின நிகழ்வில் காலை 10.40 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது .

சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அதிலிருந்து இறங்கி நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மக்களை நோக்கி நடந்து வந்து குண்டை வெடிக்க வைத்துள்ளார் என சம்பவத்தை நேரில் கண்டவர்களை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

மீலாத் தினத்தை குறிக்கும் முகமாக பள்ளிவாசலை நோக்கிக் கூட்டமாகச் சென்ற மக்களுடன் சென்றுகொண்டிருந்த அமைச்சர்களே இலக்கு வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட அமைச்சர்களான ஏ.எச்.எம்.பௌஸி, மஹிந்த விஜயசேகர, கலாசாரத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அமைச்சர்கள் அமீர் அலி, பண்டு பண்டார சந்திரஸ்ரீ ஜெயதீர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"தற்கொலைக் குண்டுதாரியொருவர் எம்மைக் கொல்ல முயன்றார். நாங்கள் தப்பிவிட்டோம். அமைச்சர்களில் விஜயசேகர மாத்திரம் சம்பவ இடத்தில் காயமடைந்துள்ளார். சம்பவ இடத்தில் ஏழு உடல்களைக் கண்டேன்" என்று அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

### அமைச்சர்களுக்கு பின்னாலேயே குண்டு வெடித்தது

அமைச்சர்களுக்குப் பின்னாலேயே குண்டு வெடித்துள்ளது எனவும்,இதனால் அந்த வீதியில் பலர் கொல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் மஹிந்த யாப்பா இதுபற்றிக் கூறுகையில்-

"நாங்கள் உணவகமொன்றுக்கு அருகில் நடந்து சென்றுகொண்டிருந்தோம். பள்ளிவாசலின் வாயிலைக் கடந்ததும் பாரிய சத்தமொன்று கேட்டது. நான் பட்டாசுச் சத்தம் என நினைத்தேன்" என்றார்.

"எனது உடைகள் முழுவதும் இரத்தம் காணப்பட்டது. நான் முதலில் பயத்தி னால் ஓடினேன். பின்னர் எனக்கு காயமேற்படவில்லை, ஏனையவர்களின் இரத்தமே என்னில் காணப்பட்டது என்பதைத் தெரிந்து கொண் டேன்" என்றும் அவர் சொன்னார்.

"இந்த நிகழ்வில் பல பாடசாலைச் சிறுவர்களும் கலந்துகொண்டனர். அவர்களில் பலர் காயமடைந்திருக்கலாம் என அஞ்சுகிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

குண்டுவெடிப்பில் பலத்த காயங்களுக்குள்ளான அமைச்சர் மஹிந்த விஜயசேகர மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அமைச்சருக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எச்.ஜி.சிறிசேன மற்றும் அவரது மகன் மனோஜ் சிறிசேனவும் காயமடைந்துள்ளவர்களில் அடங்குவர்.

இச்சம்பவம் நடைபெற்ற போது அங்கு பிரசன்னமாகியிருந்த அமைச்சர் அமீர் அலி தெரிவித்ததாவது:-

சத்தம் கேட்டதும் நாங்கள் எல்லோரும் ஓட ஆரம்பித்தோம். நான் வேகமாக ஓடிக்கொண்டிருந்த போது என் முன்னால் தலை ஒன்று வந்து விழுந்தது. எனவே அப்போதே நினைத்தேன் இது ஒரு தற்கொலைத் தாக்குதல் என்று. என்னுடைய உடலில் இரத்தமும் இறைச்சித்துண்டங்களும் காணப்பட்டன.

நான் திரும்பிப் பார்த்தபோது மகிந்த விஜயசேகரவை வாகனத்தில் ஏற்றிக் கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் தான் இத்தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டில் தற்கொலைத் தாக்குதலை நடத்தும் வல்லமை நானறிந்தவரை அவர்களுக்குத்தான் உண்டு என்றார்.

இதேவேளை, தாக்குதல் நடந்த பின்னர் மகிந்த விஜயசேகரவை அழைத்துச் செல்வதற்காக விசேட வைத்தியர்குழுவுடன் ஹெலிஹெப்டர் ஒன்று அனுப் பப்பட்டது. அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் சத்திர சிகிச்சை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

(அ-சி-6)

## கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலக அதிகாரிகள் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு அதிகாரிகள் நாவற்குழி களஞ்சியத்தில் வாகனங்களைப் பெறுப்பேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.உலக உணவுத்திட்டத்தின் நிவாரணத்திற்கான 100 மெற்றிக்தொன் சீனி, 100 மெற்றிக்தொன் பருப்பு, 60 மெற்றிக்தொன் மரக்கறி எண்ணெய் ஆகியன 20 லொறிகளில் எடுத்துவரப்பட்டன. இரண்டு லொறிகளில் தனியாருக்கான பழவகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்களை இறக்கும் பணிகள் நேற்றிரவே ஆரம்பமாகின. அவை இறக்கி முடிக்கப்பட்டதும் 11 லொறிகளில் குடாநாட்டில் உற்பத்தியான வெங்காயம், மரக்கறிவகைகள் மற்றும் மீன், கருவாடு ஆகியன ஏற்றப்பட்டு இன்றைய தினமே வாகனங்கள் தெற்கே அனுப்பப்படும் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (அ-1-288-86)

## அகதிமுகாம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அகதி முகாம்கள் குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும்குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் ஒவ்வொரு நாளும் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்று ஐக்கிய நாடுகள் சபை கருதுகின்றது. எனினும், எண்ணிக்கைகளை உறுதிசெய்ய முடியாதுள்ளது.

வன்னியில் அமைக்கப்படும் இடைத்தங்கல் முகாம்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை சில உதவிகளை அளித்துள்ளது.

எனினும், நாம் இந்த முகாம்களில் நடமாட்ட சுதந்திரம் இன்மை குறித்துக் கவலை கொண்டுள்ளோம்.

குறிப்பிட்ட முகாம்கள் சர்வதேச தராதரத்துக்கு அமைய ஏற்படுத்தப்படாவிட்டால், நாம் நிதியுதவி வழங்குவதை அது பாதிக்கும். இதனால் அந்த முகாம்களில் உள்ளவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனினும் முகாம்களின் நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானித்த பின்னரே நீண்டகால நிதியுதவி குறித்து தீர்மானிக்க வேண்டும் - என்றார். (அ-சி)

Trinity College & University
Coordinating Office
Manipay

B.Sc(Hons) in Computer Science

பட்டப்படிப்புக்கள் 14/03/2009 அன்று புதிய பிரிவுகள் (Batch - II) ஆரம்பமாகின்றன.

எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் M.Sc in IT பட்டப்படிப்பினை UK,USA,CANADA,INDIA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தொடரமுடியும்.

G.C.E (O/L) or A/L பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.

(பரீட்சைகள் அனைத்தும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்)

Trinity College & University has an honor to be appointed as a "Career Development Training Provider" by the British Government. The Degrees are fully acceptable for all Governments of UK, EU, Norway & Iceland Wide reference No 57255 of Individual Learning Account (ILA)

விண்ணப்பபடிவங்களுக்கும் மேலதிக விபரங்கட்கும் :-

UNI TECHNOLOGY
Degree Division
Manipay
T.P :- 060 221 6433

யாழ்.பல்கலைக்கழக விசேட கற்கைகளின் தெரிவுக்கான பொது உளச் சார்பு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. திங்கள், செவ்வாய், வியாழன் 1மணி- 3மணிவரை

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு, (யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக) யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org